# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 4 | ஜூலை – செப்டெம்பர் 1998 | இதழ் 3



**மார்டின் லூதர்**

# திருமறைத்தீபம்

Issue No.3 of 1998

ISBN 1173-7255

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. எழுதிக் கேட்கும் எவருக்கும் பத்திரிகை சந்தா எதுவுமின்றி இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ஏனையோருக்கு பத்திரிகையை அறிமுகப்படுத்தி வைப்பதன் மூலம் வாசகர்களும் இவ்வூழியத்தில் பங்கு கொள்ளலாம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

**ஆசிரியர்: ஆர். பாலா**
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Tel & Fax:** 64 9 527 1522
**email:** bala@ihug.co.nz

கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.

*- சி. எச். ஸ்பர்ஜன் (1834-1892)*



# ஆசிரியருரை:

“இறையியல்” (Theology) என்ற வார்த்தை காதில் பட்டவுடனேயே தலைதெரிக்க ஓடும் கூட்டம் கிறிஸ்தவர் கள் மத்தியில் அதிகமாகவே இருப்பது நமக்குத் தெரியும். நான் போதகராக இருக்கும் சபைக்கு புதிதாக வந்த ஒரு ஆத்துமா தான் அதுவரை போய்க் கொண்டிருந்த சபையின் போதகர் ஒருமுறை தன் சபை மக்களைப் பார்த்து, “நான் உங்களுக்கு இறையியல் போதிக்க மாட்டேன்; கிறிஸ்துவையே போதிப்பேன்” என்று பெருமையோடு கூறியதாகக் குறிப்பிட்டார். அப்போதகரைப் பொறுத்தவரை இறையியலுக்கும் கிறிஸ்துவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இவ்வாறு இறையியலற்ற ஒரு கிறிஸ்துவைப் பிரசங்கித்து ஆத்துமாக்களை அழித்துக் கொண் டிருக்கும் போதகர்களும், பிரசங்கிகளும்தான் எத்தனைபேர்! இவ்வாறு இறையியலுக்கும், வேதத்திற்கும் முதலிடம் கொடுக்காததால்தான் இன்று பெனிஹின், ஹாவார்ட் பிரவுன், கென்னத் கேப்லன்ட், போல் யொங்கி சோ போன்றோர் அநேக ஆத்துமாக்களை ஏமாற்றிப் பணம் பரித்து மாடமாளிகைகளைக்கட்டி வாழமுடிகின் றது.

என்று, கிறிஸ்தவ சபை வேதத்தையும், இறையியலையும் அலட்சியப்படுத்தத் தொடங்கியதோ அன்றே கெரிஸ்மெட்டிக் கூட்டத்தாரின் தோற்றத்திற்கும் வித்திடப்பட்டது; வேதஇறையியலின் சோதனைக்குட்படாத வெறும் அனுபவத்தை மட்டும் நாடி அலையும் கூட்டமும் தலையெடுத்தது. இதனாலேயே இன்று இவர்கள் மத்தியில் வேதபூர்வமான பிரசங்கத்தையும் காணமுடிவதில்லை. வேத வசனங்களைக் கண்மூடித்தனமாக பயன்படுத்தும் வழக்கத்தையும் காண முடிகின்றது.

மெய் கிறிஸ்தவம் தழைத்தோங்க வேதபூர்வமான தெளிவான இறையியல் கோட்பாடுகளைப் பின்பற்றுவது அவசியம். இறையியல் என்பது போதகர்களுக்கும், பிரசங்கிகளுக்கும் மட்டும் சொந்தமானதல்ல. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒருவிதத்தில் இறையியல் அறிஞனாக இருக்க வேண்டும். ஏனெனில் இறையியல் என்பது கடவுளைப் பற்றிய கோட்பாடு. கடவுளைப்பற்றி சரியாகத் தெரிந்து கொள்ளாமல் மெய் கிறிஸ்தவனாக இருக்க முடியாது. இதனைக் கருத்தில் கொண்டே இவ்விதழில் கிறிஸ்தவ இறையியல் பாடத்தை ஆரம்பிக்கிறோம். வாசித்து கர்த்தரின் அறிவில் வளர்ச்சியடையுங்கள்.

# 1 கொரி. 12-14

## (ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய விளக்கம்)

இன்று பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் குழுக்களின் தாக்கத்தினால் அந்நிய பாஷை, தீர்க்க தரிசனம் ஆகியவை குறித்து வேதத்திற்குப் புறம்பான பலபோதனைகள் நடைமுறையில் உலவி வருகின்றன. இத்தவறான போதனைகளால் பாதிக்கப்பட்டு அதையே சத்தியமென்று நம்பி கிறிஸ்தவ வாழ்க்கையில் சமாதானத்தைப் பெற முடியாமல் வாழ்ந்து கொண்டிருப்போர் பலர். இதன் மயக்கத்திற்குள்ளாகி, இது மட்டுமே கிறிஸ்தவ அநுபவமென்று கருதி தமது வாழ்க்கையைப் பாழடித்துக் கொண்டிருப்போர் அநேகர். இது சரியல்ல என்று உணர்ந்தும், இதற்கெதிராகப் பேசமுடியாமலும், உண்மை எது என்று உணர்த்திப் போதிக்கும் வல்லமையில்லாமலும் இருக்கும் போதகர்களும் அதிகம். எது உண்மை என்று தெரியாமல் அதே நேரம் இதிலும் ஏதாவது உண்மை இருக்கலாமோ என்று எண்ணி இதைக்குறித்துப் பேச விரும்பாமல் இருந்து விடுபவர்களும் பலர். இத்தகைய ஒரு குழப்பநிலைமையை ஆவிக்குரிய வரங்களைக் குறித்த போதனையின் மூலம் கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவசக் குழுக்கள் இன்று ஏற்படுத்தியுள்ளன.

### ஆவிக்குரிய வரங்கள் பற்றிய தவறான போதனைகளை எவ்வாறு எதிர் கொள்வது?

ஆவிக்குரிய வரங்கள் பற்றிய இத்தவறான போதனைகளை நாம் எவ்வாறு எதிர்நோக்குவது? இதைக்குறித்து வேதம் உண்மையில் போதிப்பது தான் என்ன என்று நாம் எவ்வாறு புரிந்து கொள்வது? பலருக்கும் இது பற்றி இருக்கும் மனக்குழப்பத்திற்கு ஒரு முடிவு கட்டி, சத்தியத்தைப் புரிந்து கொள்ளச்செய்வதெப்படி? இதற்கெல்லாம் சரியா விடைகாண வேண்டுமானால் முதலில் வேதம் என்றால் என்ற, அவ்வேதத்தை எவ்வாறு படிப்பது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். வேதத்தின் முக்கியத்துவத்தை உணராததாலும், அதைத்தம் மனம் போன போக்கில் பயன்படுத்துவதன் மூலமுமே இன்று கெரிஸ்மெடிக் கூட்டம் ஆவிக்குரிய வரங்களைப்பற்றிய பல தவறான போதனைகளை உருவாக்கி பலரையும் குழப்பி வைத்திருக்கிறது. இதிலிருந்து ஒரு முக்கிய உண்மையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது வேதத்தில் நமக்கு சரியான தெளிவில்லாவிட்டால் பலரும் நம்மை ஏமாற்றிவிடலாம் என்பதே. கிறிஸ்தவர்கள் வேதத்தில் நல்ல அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே இப்பத்திரிகையின் மேலான நோக்கமாகும்.

### வேதம் பூரணமானது

வேதம் பழைய, புதிய ஏற்பாடுகளைக் கொண்டமைந்து பூரணமடைந்தது. அத்தோடு நாம் வேறு நூல்களையோ, வேறெந்தவித தனி மனித வெளிப்பாடுகளையோ சேர்க்க முடியாது. (வெளிப்படுத்தல் ஆகமம் *22:18-19*). இவ்விரு ஆகமங்களின் மூலம் மட்டுமே கர்த்தர் தனது சித்தத்தையும், வழிகளையும் முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார். இவற்றோடு அவரது வெளிப்படுத்தல் நிறைவடைந்தது. இவ்வாறு கூறுவதால் கர்த்தரை நாம் கட்டுப்படுத்துகிறோம் என்று பொருளல்ல. இவ்வாறே கர்த்தர் தமது சித்தத்தை வெளிப்படுத்த சித்தம் கொண்டார் என்பதே உண்மை. கர்த்தருடைய சித்தத்தையும், வழிமுறைகளையும் அறிந்து கொள்ள முயல்கிறவர்கள் இன்று வேதத்தை மட்டுமே அணுகி அதனைப்படித்து அறிந்து கொள்ள வேண்டும். வேறு வழிகளில் கர்த்தர் தனது மக்களை வழி நடத்துவதில்லை. தனி மனிதர்கள் கர்த்தர் தங்களோடு தனிப்பட்டவிதத்தில் கனவுகள் மூலமும், தரிசனங்கள் மூலமும் பேசித் தமது சித்தத்தை வெளிப்படுத்தினார் என்று கூறும் மாயங்களுக்கு வேதத்தில் இடமில்லை. இவ்வாறு கூறுபவர்கள் வேதத்தின் தன்மையை சரிவர புரிந்து கொள்ளவில்லை. இவர்கள் வேதத்தின் சிலபகுதிகளைத் தங்கள் மனம் போனவிதத்தில் பயன்படுத்தி இவ்வாறான முடிவுக்கு வந்துள்ளார்கள். அத்தோடு தம்மையும் இத்தகைய போதனைக்கு உட்படுத்தி மற்றவர்களையும் தவறாக வழி நடத்தி வருகிறார்கள்.

மேலும், வேதம் தன்னைக்குறித்துப் பேசும்போது *2 தீமோத்தேயு 3:16-17* ஆகிய வசனங்களில், தான் கர்த்தரால் அருளப்பட்ட ஒரு பூரணமான தெய்வீக வார்த்தை என்ற உண்மையைத் தெரிவிக்கின்றது. அதாவது வேதம் மனித ஞானத்தினால் உருவான ஒரு சாதாரண நூலல்ல; கர்த்தருடைய

சித்தத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும் பூரண மான வெளிப்படுத்தல் என்பது இதற்குப் பொருள். வேதம் பூரணமானதென்று நாம் கூறும்போது அதில் எந்தவிதமான தவறான போதனையும் இல்லை, அதன் போதனைகளில் எந்தவிதமான குழப்பத்திற்கும் இடமில்லை, அதன் போதனைகளை எந்தவிதக்குழப்பமுமின்றி கர்த்தருடைய குழந்தைகள் தெளிவாகப்புரிந்து கொள்ள முடியும் என்று பொருள். நாம் அதற்குத் தவறான பொருள் கொடுத்துவிடலாமே தவிர, கர்த்தர் அதனை நாம் தேவ ஆவியி னுடைய துணையோடு தெளிவாகப் புரிந்து கொள்ளும் விதத்திலேயே தந்திருக்கிறார்.

## வேதம் போதுமானது

அது மட்டுமல்லாது, வேதம் குறைவற்றது, போதுமானது என்றும் நாம் இவ்வேதப்பகுதியின் மூலம் அறிந்து கொள்கிறோம். இன்னு மொரு விதத்தில் கூறப்போனால் வேதம் நிறைவானது. ஆகவே, நமது ஆவிக்குரிய வாழ்விற்கும், இவ்வுலக வாழ்விற்கும் தேவையான அனைத்துப் போதனை களையும் கர்த்தர் தனது வேதத்தில் தந்துள்ளார் என்பது இதற்குப் பொருள். எனவே, வேதத்தைத் தவிர நமக்கு வேறெதுவும் தேவை யில்லை. வேதத்தைத்தவிர வேறெ தன் மூலமும் கர்த்தர் நம்மோடு பேசுவதில்லை. இதனையே நாம் வேதம் பூரணமானதென்று கூறுவதன் மூலம் புரிந்து கொள்கிறோம். கெரிஸ்மெட்டிக் கூட்டத்தாரோடு இங்கேயே நாம் முரண்படுகின்றோம். அவர்கள் வேதத்தின் மூலம் மட்டுமே கர்த்தர் நம்மோடு பேசுகிறார் என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. வேதம் பூரணமானதென்ற உண்மையை அவர்கள் மறுக்கிறார்கள். வேதத் திற்கு வெளியில் இருந்தும், கர்த்தர் கனவுகள், தரிசனங்கள் மூலமும், வேறுபல வழிகளின் மூலமும், தொடர்ந்தும் நம்மோடு பேசிக் கொண் டிருக்கிறார் என்று அவர்கள் போதிக்கிறார்கள். இதன் மூலம் சாமானியனான மனிதனின் கனவு வெளிப்பாடுகள், தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள் ஆகியவை, அவை எவ்வளவு தூரம் வேத போதனைகளுக்கு முரணான விதத்தில் அமைந் திருந்த போதும் மனிதனால் தேவசெய்தியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய குழப் பப்போக்கினாலேயே இன்று சிரிக்கும் உபதேசங் களும், சபையில் வாந்தி எடுக்கும் கேளிக்கூத்து களும், கர்த்தரின் பெயரால் ஊழியத்தைப் பயன் படுத்தி மக்களிடம் பணம் பறிக்கும் பரதேசிகளும் நாள்தோறும் பெருகி வருகிறார்கள். வேதத்தின் போதனையை மட்டுமே இறுதி முடிவாக ஏற்றுக் கொள்ள மறுப்பதாலேயே இன்று இத்தகைய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

நமது ஆவிக்குரிய வாழ்விற்கும், இவ்வுலக வாழ் விற்கும் தேவை யான அனைத்துப் போதனை களையும் கர்த்தர் தனது வேதத்தில் தந்துள்ளார்.

மேலே நாம் இதுவரை பார்த்த உண்மைகள் வேதத்தை நாம் முறையாக விளங்கிக் கொள்ள துணை புரியும். இச்சத்தியங்களை ஏற்றுக் கொண்டு அவற்றின் அடிப்படையில் படிப்பதன் மூலம் மட்டுமே நாம் வேதத்தைப் புரிந்து கொள்ள முடியும். இவற்றை நிராகரிப்பவர்களால் வேதத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

## வேதத்தைப் புரிந்து கொள்ளப் பயன்படுத்த வேண்டிய விதிமுறைகள்

வேதத்தை சரியாகப் புரிந்து கொள்ள நாம் வேதம் தன்னில் கொண்டுள்ள சில விதிகளைப் பயன் படுத்த வேண்டும். இவ்விதிகள் நாம் வேதத்தைத் தவறாகப்புரிந்து கொள்ளாமலிருக்கத்துணை செய்யும்.

1. வேதம் தனக்கெதிரான, முரணான எப் போதனைகளையும் தன்னில் கொண்டிராது.

இவ்வாறு கூறுவதன் மூலம் வேதத்தில், அதன் போதனைகளுக்கெதிரான முரணான போதனைகளை நாம் பார்க்க முடி யாது என்பதைப் புரிந்து கொள் கிறோம். வேதம் தனக்கெதிராகப் பேசாது. இதை மனத்தில் வைத்து நாம் வேதத்தைப் படித்தால் வேதத் தின் ஏனைய பகுதிகளுக்கு முர ணானவிதத்தில் எப்போதனையை யும் ஒரு பகுதியில் இருந்து உருவாக் குவதை நாம் தவிர்த்துக் கொள்ள முடியும்.

2. வேதப்பகுதிகளை அவற்றின் சாதாரண இலக்கண, வசன அமைப் பின் அடிப்படையில் (Plain meaning of Scripture) புரிந்து கொள்ள வேண் டும்.

அதாவது, ஒரு வேதப்பகுதியை நாம் வாசிக்கும் போது அது சாதாரணமாக இலக்கண, வசன அமைப்பின்படி எதைக்கூறுகிறதோ அதையே நாம் புரிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து அதற்குள் ஏதோ மறைபொருள் இருப்பதாக எண்ணி மயங்கக்கூடாது. ஆதியாகம் முதல் அதிகாரத்தில் கர்த்தர் தனது வார்த்தையின் மூலம் வெளிச்சத்தைத் தோற்றுவித்தார் (ஆதி. 1:3) என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் மறைபொருள் எதுவும் இல்லை. அதை வேதம் போதிக்கும் விதத்தி லேயே நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு மாறாக அதனை நாம் உருவகப்படுத்திப் போதிக் கவோ, அதற்கு வேறு பொருள் கொடுக்கவோ முயலக்கூடாது. அதேவேளை, உருவகமாகவும் (யோவான் 10, 15), உவமையாகவும் (மத்தேயு 13), தீர்க்கதரிசனமாகவும் காணப்படும் பகுதிகளை அவற்றின் அடிப்படையிலேயே படித்துப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு வேதப்பகுதி சாதாரண மான மொழி வழக்கில் காணப்படுகிறதா? அல்லது உருவகமா? உவமையா? தீர்க்கதரிசனமா? என்பதை வேதமே தீர்மானிக்கிறது. அதை நாம் தீர்மானிக்கக்கூடாது. இதனை வேதமே வெளிப்

படுத்துகிறது. அடுத்து நான் விளக்கப் போகும் விதிமுறை ஒரு வேதப்பகுதி எத்தகைய மொழியில் காணப்படு கிறது என்று புரிந்து கொள்ள உதவும்.

3. வேதப்பகுதிகளை அவை காணப்படும் பகுதியின் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்பப் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும் (Context).

வரலாறு, கலாச்சாரம், மொழி ஆகியவற்றை வேதத்திலிருந்து நம்மால் பிரிக்க முடியாது. இவற்றின் மத்தியிலேயே நாம் கர்த்தரின் வெளிப்படுத்தலைக் காண்கிறோம். வேதத்தைப் படிக்கும்போது இவற்றிற்கும் வேதத்திற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்ற மனப்போக்கில் படிக்க முயலக்கூடாது. உதாரணமாக, பழைய ஏற்பாடு ஆரம்பம் முதல் கர்த்தர் தோற்றுவிக்கும் ஒரு நாட்டையும் அதன் மூலம் அவர் செயல்படுத்த முனையும் நோக்கங்களையும் தெரிவிக்கின்றது. பழைய ஏற்பாட்டைப் படிக்கும்போது இதனை மறந்துவிட்டு நாம் அதைப்புரிந்து கொள்ள முயலக் கூடாது. அத்தோடு அங்கே அநேக தீர்க்கதரிசனப் பகுதிகளும் கானப் படுகின்றன. புதிய ஏற்பாட்டில் இதேபோல் கிறிஸ்துவின் போதனை களில் உவமைகளை நாம் பார்க்கி றோம். உருவகங்களையும் பார்க்கி றோம். இவற்றை நாம் கவனத்தில் கொள்ளல் அவசியம். இப்பகுதி களை நாம் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவை கானப் படும் பகுதிகளை ஆராய்தல் அவசியம். உதாரணமாக தீர்க்க தரிசனப்பகுதிகளைப் பார்ப் போமானால் அவை தீர்க்கதரிசனம் என்று நாம் அறிந்து கொள்ளும் விதத்தில் அவ் வேதப்பகுதிகள் அதை நமக்குத் தெரிவிக்கும். கிறிஸ்துவின் உவமைகள் கானப்படும் பகுதிகளைப் பார்த்தால் அங்கேயும் கிறிஸ்துவே, தான் உவமைகளின் மூலமாகப் போதிக்கப்போவதாகத் தெரிவிப்பதைப் பார்க்கலாம். இவற்றைக் கவனத்தில் கோண்டே அப்பகுதிகளைப் படிக்க வேண்டும்.

முக்கியமாக ஓவ்வொரு வேதபகுதியையும் படிக்கும்போது, அதற்கு முன்னாலும் பின்னாலும் என்ன கூறப்பட்டிருக்கின்றது என்று எப்போதும் பார்க்க வேண்டும். அதாவது, அப்பகுதி எங்கு ஆரம்பமாகி எங்கு முடிகிறது என்று பார்த்து அதன் அடிப்படையில் அப்பகுதியைப் படிக்க வேண்டும். இதன் மூலம் நாம் அப்பகுதியைப் பற்றிய கூடுதலான விளக்கத்தை பெற்றுக் கொள்ள முடியும். சில வேளைகளில் ஒரு வேதபகுதியின் சூழ்நிலை அல்லது சந்தர்ப்பப் பொருத்தத்தை (Context) அறிந்து கொள்ள, அது காணப்படும் நூலின் பல அதிகாரங்களை அல்லது முழு நூலையுமே படிக்க நேரிடும். இவ்வாறு படிக்கும் போது அவ்வேதப் பகுதியில் யார் என்ன கூறு கிறார்கள்? எத்தகைய மொழி நடையில் அதாவது சாதாரண மொழி நடையிலா? அல்லது உருவக, உவமை நடையில் அது அமைந்துள்ளதா? அப் பகுதி ஒரு வரலாற்றுச் சம்பவமா? தீர்க்க தரிசனமா? அல்லது அது கட்டளையாகக் கொடுக் கப்பட்டுள்ளதா? நடந்து கொண்டிருக்கும் அல்லது நடந்து முடிந்த ஒரு காரியத்தை விவரிக்கின்றதா? என்பன போன்ற மிகவும் அவசியமான விளக்கங் களைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு ஒரு பகுதியின் சந்தர்ப்பப் பொருத்தத்தை அறிந்து கொள்ள முயலாமல் நாம் வேதத்தைப் படிக்க முயலக் கூடாது.

இன்று கெரிஸ்மெட்டிக் கூட்டத்தார் மட்டுமல்லாது சுவிஷேச இயக்கத்தாரும்கூட வேதத்தைப்படிக்கப் பயன்படுத்த வேண்டிய மிக வும் அவசியமான இச்சாதாரண வழிமுறைகளைக் கூடப் பயன்படுத்துவதில்லை. இதனால் மனம் போன போக்கில் வேதத்திற்கு விளக்கம் கொடுக்க முற்படுவதோடு கேட்கும் மக்களை யும் வேத ஞானமற்ற குருடர்களாக தொடர்ந்து இருட்டில் வைத்திருக்கும் நிலைமையை எங்கும் பார்க்கிறோம்.

> ஒரு வேத சத்தியத்தை அதே சத்தியத்தைப் போதிக்கும் வேதத்தின் பல பகுதிகளை ஆதாரமாகக் கொண்டு விளக்கும்போது அச்சத்தியம் உறுதிப்படுத்தப் படுகின்றது.

4. வேதப்பகுதிகளை எப்போதும் ஏனைய வேதப்பகுதிகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும் (Compare Scripture with Scripture).

வேதத்தின் எந்தவொரு பகுதியும் போதிக்கும் சத்தியத்தை நாம் சரியாகப்புரிந்து கொண்டிருக்கி றோமா என்று அறிய நாம் அப்பகுதியை அதே விதமான போதனையைக் கொண்டுள்ள வேதத் தின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிட்டுப் படித்துத் தீர்மானிக்க வேண்டும். இதன் மூலம் வேத போதனைகளைத் தவறான முறையில் விளங்கிக் கொள்ளும் ஆபத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம். இம் முறையை ஆங்கிலத்தில் Analogy of Faith என்று அழைப்பார்கள். ஒரு வேத சத்தியத்தை அதே சத்தியத்தைப் போதிக்கும் வேதத்தின் பல பகுதிகளை ஆதாரமாகக்கொண்டு விளக்கும் போது அச்சத்தியம் உறுதிப்படுத்தப்படுகின்றது. வேத வல்லுனரான ஏ. டபிள்யூ. பின்க் (A.W.Pink) இதை அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார். இதன் மூலம் வேதபகுதிகளுக்கு நாம் நினைத்தவித்தில் பொருள் கூற முற்படும் ஆபத்தில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ளலாம். உதாரணமாக, இரட்சிப் பைப் பெற்றுக் கொண்டவர்கள் அதை இழந்து போகலாம் என்ற தவறான போதனையை எடுத்துக் கொள்வோம். இதைப் போதிப்பவர்கள் இதற்கு உதாரணமாக அடிக்கடி எடுத்துக் காட்டும் வேதபகுதி எபிரேயர் 6:4-6 ஆகும். ஆனால் வேதத்தை முறையாகப் படித்துப் பார்த்தால் முழு வேதமும் ஒருவர் தான் பெற்றுக் கொண்ட இரட்சிப்பை இழந்து போவதில்லை என்று உறுதி

யாகப் போதிப்பதைப் பார்க்கலாம். ஆகவே இப்பகுதி வேதத்தின் ஏனைய பகுதிகள் போதிக்கும் சத்தியத்திற்கு முரணானதைப் போதிக்கவில்லை என்ற முடிவுக்கு வரலாம். அத்தோடு இப்பகுதி ஒருவர் இரட்சிப்பை இழந்து போகலாம் என்ற போதனையைத் தருவது போல் தென்பட்டாலும், உண்மையில் அது அமைந்துள்ள சந்தர்ப்பப் பொருத்தத்தின் அடிப்படையில் பார்க்கும் போது வேறொரு உண்மையையே போதிக்கின்றது என்பதும் புலனாகும். அதாவது, வேதபிரசங்கத்தின் பாதிப்புக்குள்ளாகி, பரிசுத்த ஆவியின் வல்லமையின் கீழ் வந்து, வரப்போகும் காரியங்களைப்பற்றிய அறிவையும் கூட பெற்றுக் கொண்ட போதும் ஒருவர் உண்மையில் கிறிஸ்தவராக இல்லாதிருக்க முடியும் என்றே இப்பகுதி போதிக்கிறது. ஏனெனில் மேற்குறிப்பிட்ட அனுபவங்களை எந்தவொரு மனிதனும் இரட்சிப்பை அடையாமலே அனுபவிக்க முடியும். ஆனால், இத்தகைய தற்காலிகமான அனுபவங்களுக்கும், நிரந்தரமாக ஒருவர் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டதனால் அனுபவிக்கக்கூடிய அனுபவங்களுக்கும் பெரும் வித்தியாசமுண்டு. தற்காலிகமாக வேதத்தில் ஏற்படும் ஆர்வம், கிறிஸ்துவில் ஏற்படும் பற்றுதல் ஆகியவை நல்லவையே ஆயினும் அவை கிறிஸ்துவை அறிந்து கொண்ட அனுபவத்தால் உருவானவையாய் இல்லாவிட்டால் நிலைத்திருக்க முடியாது. இதையே விதைப்பவனின் உவமையின் (மத்தேயு 13) மூலம் கிறிஸ்து நமக்குப் புலப்படுத்துகிறார். விதைப்பவன் விதைக்கும் சில விதைகள் நிலத்தில் சில காலம் தங்கியிருந்து முளைவிடுவதைப் போல கர்த்தரை உண்மையில் அறியாமலேயே சிலரால் அவரில் ஆர்வம் கொள்ள முடிகிறது. ஆனால் முளைவிடும் விதை எவ்வாறு ஆதவனின் கதிர்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமலும், சுற்றி வளரும் களைகளை எதிர்த்து நிற்க முடியாமலும், வளர முடியாமலும் வாடி வதங்கி இறந்து போகின்றதோ அதேபோல் இவர்களும் உலகப் பற்றினாலும், வாழ்க்கையில் ஏற்படும் எதிர்ப்புகளினாலும் கிறிஸ்துவில் தங்களுக்கு இருக்கும் ஆர்வத்தை இழந்து போகிறார்கள். உண்மைக் கிறிஸ்தவன் இவ்வாறு நடக்க மாட்டான். அவன் இரட்சிப்பை நிச்சயமாகப் பெற்றுக் கொண்டிருப்பதாலும், அவனுள் ஆவியானவர் நிரந்தரமாக இருப்பதாலும் அவனால் கிறிஸ்துவை இழக்க முடியாது. இவ்வாறாக வேதத்தின் மற்ற பகுதிகளோடு இப்பகுதியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இப்பகுதி உண்மையில் எதைப் போதிக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. வேதத்தைப் படிக்க இவ்விதிகளை நாம் முறையோடு பின்பற்றினால் கர்த்தர் போதிக்கும் சத்தியங்களை நாம் நல்ல முறையில் புரிந்து கொள்ளலாம்.

> கெரிஸ்மெட்டிக் கூட்டத்தாருக்கு வேதம் ஒரு மந்திரவாதியின் கையிலிருக்கும் கோலைப் போலவும், வசிய மருந்தாகவுமே தெரிகிறது.

1 கொரிந்தியர் 12-14 வரையிலான அதிகாரங்கள் ஆவிக்குரிய வரங்களைப்பற்றி எத்தகைய போதனையைத் தருகின்றன என்பதை நாம் ஆராயுமுன் வேதத்தின் தன்மையைப்பற்றியும், அதனைப் படிக்கப்பயன்படுத்த வேண்டிய முறைகளைப்பற்றியும் நாம் புரிந்து கொள்வது மிகவும் அவசியம். வேதம் என்றால் என்னவென்று தெரியாமல் வேதத்தைப் படித்து விளங்கிக் கொள்ள முயல்வது கல்லில் நாருரிக்க முயல்வது போலாகும். பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டத்தார் நாம் இதுவரை பார்த்த விதத்தில் வேதத்தை அணுகுவதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் வேதம் ஒரு மந்திரவாதியின் கையில் இருக்கும் கோலைப்போலவும், வசிய மருந்தாகவுமே தெரிகிறது. இதனால் அவர்கள் தமது மனம் போன போக்கில் வேதத்தைப் பயன்படுத்தி உலகப்பிரகாரமான ஒரு கிறிஸ்தவத்தை உருவாக்கியுள்ளார்கள். சொந்த அனுபவங்களுக்கும், மனக் கிளர்ச்சிகளுக்கும், முட்டாள்தனத்திற்குமே இக்கூட்டத்தாரிடம் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இல்லாவிட்டால் மனிதன் இணையகத்தின் (Internet) மூலம் உலகத்தையே தனது வீட்டிற்குள் கொண்டு வந்திருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டின் முடிவில், நாயைப்போல் குரைக்கவும், குரங்கைப்போல் சத்தமிடவும் முற்படுவானா?

இதுவரை வேதத்தின் தன்மையைப்பற்றியும், அதை விளங்கிக்கொள்ளப் பயன்படுத்த வேண்டிய முறைகளைப்பற்றியும் நாம் படித்தவற்றின் அடிப்படையில் இனி வரப்போகும் இதழ்களில் 1 கொரிந்தியர் 12-14 வரையிலான அதிகாரங்களில் கர்த்தர் பவுல் மூலம் உண்மையில் போதிப்பதுதான் என்ன என்று ஆராய்வோம்.

## வாசகர் மடல்கள்

*வாசகர்கள் தொடர்ந்து அனுப்பிவரும் ஒவ்வொரு மடலுக்கும் எங்கள் நன்றி. உங்களைப் புரிந்து கொள்ள அவை எமக்குத் துணை புரிகின்றன. ஒவ்வொன்றிற்கும் பதிலளிக்க முடியாத நிலையில் உள்ளோம். முடிந்தவரை முக்கியமான கடிதங்களுக்கு நாம் பதிலளித்து வருகிறோம். - ஆசிரியர்*

# வியாக்கியானப் பிரசங்கம்

## Expository Preaching

## -3-

**பிரசங்கம்**

*ஒரு நல்ல மாணவனால் மட்டுமே வேதத்தில் தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு நல்ல மாணவனால் மட்டுமே ஆணவமற்ற, விசுவாசமுள்ள போதகனாக இருக்க முடியும்.*

வியாக்கியானப் பிரசங்கத்தைப்பற்றி கடந்த இதழோடு எழுதி முடித்துவிடுவதே எனது நோக்கமாக இருந்தது. ஆனால் பல போதகர்களோடு அவர்களுடைய பிரசங்க முறைகள் பற்றி நான் சமீபத்தில் பேசி அறிந்து கொண்ட அனுபவங்கள் இதைப்பற்றி மேலும் ஒரு முறை எழுத வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை வியாக்கியானப் பிரசங்கம் என்றால் என்ன? அதன் வரலாறு, இன்றைய சூழ்நிலையில் இப்பிரசங்க முறையின் அவசியம், இப்பிரசங்க முறையைப் பயன்படுத்தத் தேவையான சாதனங்கள் ஆகியவை குறித்து விளக்கமாகப் பார்த்து வந்துள்ளோம். இவ்விதழில் நான் அனுபவ ரீதியாக அறிந்து கொண்ட, போதகர்கள், பிரசங்கிகள் மத்தியில் இன்று நடைமுறையில் இருக்கும் வழிமுறை களை மனதில் கொண்டு சில முக்கியமான, எல்லாவகைப் பிரசங்கத்திற்கும் தேவையான, அதேவேளை வியாக்கியானப் பிரசங்கத்திற்கு அதிமுக்கியமாகத் தேவையான சில பொதுவான காரியங்களை ஆலோசனையாக பிரசங்க ஊழியத்திலிருப்பவர்களுக்குப் பயன்படும்படியாகக் கூற விரும்புகிறேன். கடந்த பதினெட்டு வருடங்களாக இவ்வூழியத்தில் நான் பெற்றுக் கொண்ட, தொடர்ந்து பெற்று வருகின்ற அனுபவங்களும் இங்கே இதற்குத்துணை புரியும் என்று நம்புகிறேன்.

**1. போதகர்கள் எப்பொழுதுமே முதலில் விசுவாசமுள்ள நல்ல மாணவர் களாக இருக்க வேண்டும்** — வேதத்தை பிரசங்கம் செய்வதற்காக மட்டும் படிக்கும் போதகர்கள் பெரும் தீமை செய்கிறவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய தவறான முறையினாலேயே இன்று பல போதகர்களால் வேதத்தை சரியாகப் போதிக்க முடிவதில்லை. வேதத்தை பிரசங்கம் செய்வதற்காக மட்டும் அணுகக்கூடாது. வேதத்தைத் திறக்கும்போது அதில் கர்த்தர் சொல்லியிருப்பதை நல்லவிதமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு நோக்கம் மட்டுமே நமக்கு எப்போதும் இருக்க வேண்டும். பிரசங்கப் பொருளுக்காக வேதத்தைப் படிக்கும் போது கூட பிரசங்கம் செய்வதற்காகப் படிக்கிறோம் என்ற எண்ணமே மனதில் வராமல் இருப்பது நல்லது. அவ்வாறு படித்து சரியாக வேதப்பகுதியில் தெளிவு பெற்ற பின்பு தான் பிரசங்கம் என்ற எண்ணமே தோன்ற வேண்டும். ஒரு நல்ல மாணவனாக தெளிவாக கர்த்தரின் வார்த்தையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற பயபக்தியோடு படிக்க வேண்டும். ஹேர்மன் விட்சியஸ் என்ற ஒல்லாந்து நாட்டு வேதவல்லுனர், "முதலில் நன்றாகக் கற்றுக் கொண்ட ஒருவராலேயே பின்பு நன்றாகப் போதிக்க முடியும்" என்று கூறியுள்ளார். ஒரு நல்ல மாணவ னால் மட்டுமே வேதத்தில் தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு நல்ல மாணவனால் மட்டுமே ஆணவமற்ற, விசுவாசமுள்ள போதகனாக இருக்க முடியும்.

**2. முழு வேதத்தின் உள்ளடக்கம் பற்றிய பொதுவான அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்** — வேதத்தை போதகர்கள் அன்றாடம் படிக்க வேண்டும். அதனை முழுமையாகப் படிக்க வேண்டும். வேத்தின் ஒவ்வொரு நூலும் என்ன போதிக்கின்றது என்பதைத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு நூலுக்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன என்பதில் தெளிவிருக்க வேண்டும். ஒவ்வொரு நூலும் முழு வேதத்தில் வகிக்கும் பங்கு என்ன என்பதை அறிந் திருக்க வேண்டும். இவற்றில் பூரண அறிவு இருந்தால் மட்டுமே வேதத்தின் எப்பகுதியையும் முறையாகப்படித்து முழு வேதத்தின் அடிப்படையில் அதில் கூறப்பட்டிருக்கும் செய்தி என்ன என்று புரிந்து கொள்ள முடியும். இதைச்

செய்ய போதகர்கள், அவர்கள் கிராமத்தில் ஊழியம் செய்பவர்களாக இருந்தாலும் சரி, நகர்ப்புறத்தில் ஊழியம் செய்பவர்களாக இருந்தாலும் சரி அதிக நேரத்தை வேதம் படிப்பதில் செலவிட வேண்டும். வேதத்தைப் படிப்பதில் நேரம் செலுத்தாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்தால் வியாக்கியானப் பிரசங்கம் செய்வதை மறந்துவிட வேண்டியதுதான். சமீபத்தில் எட்வர்ட் டொனலி என்ற அயர்லாந்தைச் சேர்ந்த ஒரு சீர்திருத்தவாத போதகர் இதுபற்றிக் கூறும்போது, "சிலர் என்னிடம், படிப்பறையில் போதக உழியத்திற்கு தயார் செய்வது மிகக் கடினமான காரியமல்லவா? என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நானளிக்கும் பதில், வாரம் முழுவதும் படிப்பறையில் இருந்து விட்டு இரண்டு மணி நேரம் மட்டும் ஞாயிறு தினங்களில் ஆலயத்திற்கு செல்வதையே நான் மேலானதாகக் கருதுகிறேன். இதுவே எனக்கு ஆனந்தத்தைத் தருவதாகும். படிப்பறையில் நடக்கும் கடுமையான வேலைக்கான பரீட்சையே ஞாயிறு தினத்தில் ஆலயத்தில் நடக்கின்றது." போதகர் டொனலி இதன் மூலம் வேதத்தில் கவனம் செலுத்திப் படிப்பதன் அவசியத்தைத் தெளிவாக வலியுறுத்து கிறார்.

**3. வேதப்பகுதிகளை அதில் உள்ளபடியே படிக்க வேண்டும் —** இன்று பொதுவாகவே நாம் அநேக போதகர்களிடம் வேதம் படிப்பதற்கே உதவாத ஒரு போக்கினைப் பார்க்க முடிகின்றது. எவ்வேதப்பகுதியை எடுத்துக் கொண்டா லும் அது தனது சாதாரண மொழி நடையில் எதைக்கூறுகிறதோ அதை ஏற்றுக் கொள்ளாமல் அதற்குள் ஏதோ ஒரு மறைபொருள் இருக்கத்தான் வேண்டும்; இது நமது கண்களுக்குத்தான் சாதாரணமாகத் தென்படுகிறதே ஒழிய கர்த்தர் இதன் மூலம் வேறெதையோ கூறுகிறார் என்ற எண்ணத்தில் அதற்கு விளக்கம் தேடி அலையும் போக்கு பெரும்பாலும் அநேகரிடம் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் பலருக்கு வேதத்தின் தன்மை (The nature of the Bible) புரியாததுதான். வேதத்தை ஜாலவித்தை புரியும் ஒரு மந்திரக் கோலாக பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் வேதத்தை அவ்வாறு கொடுக்க வில்லை. நமது மொழியில், நாம் புரிந்து கொள்ளும்விதத்திலேயே அதைத் தந்துள்ளார். ஆகவே, வேதத்தை நாம் மற்ற நூல்களைப்படிக்கும்போது எப்படிப் படித்துப் புரிந்து கொள்ள முயல்கிறோமோ அதேவிதத்தில் படிக்க வேண்டும். இதில் பயிற்சி பெறுவதற்கு "உள்ளதை உள்ளபடியே படிக்க வேண்டும்" என்ற வாசகத்தை நமது படிப்பறையில் கண்ணில் தெரியும்படி எழுதி வைத்தாலும் கூடத் தப்பில்லை. வேதம் புரியாதவர்கள்தான் கேட்போரைக் கவர புதிது புதிதாக எதையாவது சொல்ல வேண்டும் என்று :வேதத்தைத் திரித்துப் போதிக்கிறார்கள். வேதம் தெரிந்தவர்கள் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆகவே, வேதத்தில் தெளிவு ஏற்பட வேதம் கொடுக்கப் பட்டுள்ளபடி அதைப்படிக்க வேண்டும்.

இதனை எழுத்துப்படியான விளக்கவிதி (Literal Interpretation) என்றும் கூறுவார்கள். வேதத்தை எழுத்துப்படி விளக்க வேண்டும் என்ற விதியைத் தவறாகப்பயன்படுத்துபவர்களும் உண்டு. டிஸ்பென்ஷேசனலிஸக் (Dispensationalism) கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள் இவ்விதியைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அதாவது வேதத்தில் காணப்படும் மொழிநடை, வரலாறு என்பவற்றிற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்காது அனைத்தையும் எழுத்துப்படி, literal ஆக விளக்க வேண்டும் என்பது அவர்களுடைய வாதம். இங்கேயே அவர்கள் பெரும் தவறு செய்கிறார்கள். வெளிப்படுத்தல் ஆகமத்தில் சாத்தான் சங்கிலியால் பிணைக்கப்படுவான் என்று எழுதியிருக்கிறது. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் இங்கே அடையாள மொழி நடை (Symbolical language) பயன்படுத்தப்பட்டிருப்பதை கவனத்தில் கொள்ளல் அவசியம். இல்லாவிட்டால் கர்த்தர் சாத்தானை உண்மையிலேயே சங்கிலியால் பிணைக்கத்தான் போகிறார் என்று பொருள் கொள்ள நேரிடும். ஆனால், உண்மையில் இங்கு அடையாள மொழியின் மூலம் போதிக்கப்படுவதென்ன வெனில் கர்த்தர் சாத்தானின் அதிகாரங்களுக்கெல்லாம் முடிவுகட்டி அவனது ஆட்சி, அட்டகாசங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்போகிறார் என்பதுதான். அதோபோல், ஒரு உவமையை நாம் உவமையாகத்தான் எடுத்துக் கொண்டு விளக்க வேண்டுமே தவிர அதனை வேறு விதமாக விளக்க முனையக்கூடாது. உண்மையில் எழுத்துப்படியான விளக்க விதி என்றால், வரலாற்றுச்சம்பவங்களை வரலாற்றுச் சம்பவங்களாகவும், கட்டளைகளைக் கட்டளைகளாகவும், உவமைகளை உவமைகளாகவும் அவை எவ்வாறு

**பிரசங்கம்**

**வாரம் முழுவதும் படிப்பறையில் இருந்து விட்டு இரண்டு மணி நேரம் மட்டும் ஞாயிறு தினங்களில் ஆலயத்திற்கு செல்வதையே நான் மேலானதாகக் கருதுகிறேன். இதுவே எனக்கு ஆனந்தத்தைத் தருவதாகும். படிப்பறையில் நடக்கும் கடுமையான வேலைக்கான பரீட்சையே ஞாயிறு தினத்தில் ஆலயத்தில் நடக்கின்றது.**

## பிரசங்கம்

**வேதம் புரியாதவர்கள் தான் கேட்போரைக் கவர புதிது புதிதாக எதையாவது சொல்ல வேண்டும் என்று வேதத்தைத் திரித்துப் போதிக்கிறார்கள். வேதம் தெரிந்தவர்கள் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமில்லை.**

தரப்பட்டுள்ளதோ அதேவிதமாக கவனித்துப் படிக்க வேண்டும் என்று தான் பொருள். இன்று போதகர்கள் உறுதியுடன் செய்யவேண்டிய முதல் கடமையாக இது அமைகின்றது.

**4. வார்த்தைகளின் பொருளறிந்து படித்தல் அவசியம்** — வேதப்பகுதிகளைத் தியானித்துப் படிக்கும்போது அவற்றின் வார்த்தைப் பிரயோகங்களையும், வசனங்களில் காணப்படும் வார்த்தைகளுக்கிடையில் உள்ள தொடர்புகளையும் கவனித்துப் படிக்கவேண்டும். வார்த்தைகளையும், வார்த்தைகளைத் தொடர்பு படுத்தும் இடைச்சொற்களையும் ஆவியானவர் தெரிவு செய்து பயன்படுத்தியுள்ளார். ஆகவே, அவற்றை நிதானித்துப் படித்துப் புரிந்து கொள்ளுதல் அவசியம். தேவனுடைய வெளிப்படுத்தலை சரிவரப்புரிந்து கொள்ள வேண்டுமானால் இவ்வாறு அவசரப்படாமல் வேதத்தை அக்கறையோடு படிப்பது அவசியம். இவற்றில் கவனம் செலுத்தாவிட்டால் கர்த்தர் கூறும் செய்தியை நாம் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடும். உதாரணத்திற்கு யோவான் 4:4 லும், லூக்கா 19:5 லும் இயேசு கிறிஸ்து சமாரியப் பெண்ணையும், சகேயுவையும் சந்திப்பதற்காக அவ்வழியில் போக வேண்டியிருந்ததாக வாசிக்கிறோம். மூல மொழியிலே இவ்விரு பகுதிகளிலும் கிரேக்க பாஷையில் dei என்ற சிறு இடைச் சொல் இதைக்குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை இலக்கணத்தின்படி partical of necessity என்று கூறுவார்கள். இவ்வார்த்தை சிறு இடைச்சொல்லாக இருந்தாலும் கிறிஸ்து அங்கே தற்செயலாகப் போகவில்லை, அவர் அங்கே போவதற்கு தெய்வீக வழிநடத்தலே காரணம் என்பதை இச்சொல் எடுத்துரைக்கிறது. தமிழ் வேதத்தில் யோவான் 4:4 இல், "இயேசு சமாரிய நாட்டின் வழியில் போகவேண்டியிருந்தபடியால்" என்று இச்சொல் சரியாகவே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இங்கே "போகவேண்டியிருந்தது" என்ற பதத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. போதிப்பவர்கள் இதைக்கவனித்துப் படிக்காவிட்டால் அப்பகுதியின் முழு அர்த்தத்தையும் இழந்துவிட நேரிடும்.

வியாக்கியானப் பிரசங்கம் செய்வதற்கு இவ்விதமாக வேதத்தின் வார்த்தைப் பொருளறிந்து படிப்பது மிக மிக அவசியம். கர்த்தர் வேதத்தை ஆவியின் மூலமாக அருளியபோது தனது போதனைகளை மட்டும் கொடுக்காமல், அப்போதனைகளை வெளிப்படுத்தத் தகுந்த மொழிநடை, வார்த்தைகள் ஆகியவற்றையும் கவனத்தோடு தெரிவு செய்து அருளினார். ஆகவே, வேதத்தின் வார்த்தைப்பிரயோகங்கள், வார்த்தைகள் ஆகியவற்றின் பொருள் அறிந்து போதிக்க வேண்டும். இவ்வாறு போதிப்பதன் மூலம் கர்த்தரின் வெளிப்படுத்தலை முழுமையாகப் புரிந்து கொண்டு போதிக்கலாம். இதனால்தான் வியாக்கியானப் பிரசங்கமே வேதப்பிரசங்க முறைகளில் தலையானது என்று கூறுகிறோம்.

**5. தமிழறிவும், இலக்கணத்தேர்ச்சியும் அவசியம்** — தமிழில் வேதத்தைப் போதிப்பவர்கள் அம்மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது நல்லது. இவ்வாறு நான் கூறுவது சிலருக்கு வியப்பைத் தரும். ஆனால் இதில் நாம் வியப்படைவதற்கு ஒன்றுமேயில்லை. வேதம் எபிரேய, கிரேக்க மொழிகளிலேயே எழுதப்பட்டுள்ளது. அம்மொழிகளுக்கு இலக்கணம் உண்டு. இலக்கியத்தரம் உண்டு. இவற்றை வேதம் முழுவதும் பார்க்கலாம். உதாரணமாக பவுல் தனது நிருபங்களில் தன்னுடைய மொழி வன்மையையும், புலமையையும் காட்டுவதைப் பார்க்கலாம். தான் கூற வரும் விடயத்தைத் தெளிவாக்குவதற்காக கிரேக்க மொழிப் புலமையைப் பவுல் பயன்படுத்தியதை ஆவியானவரே அனுமதித்துள்ளார். புதிய ஏற்பாட்டின் அதிகமான பகுதிகளை எழுத கர்த்தர் பவுலையும், லூக்காவையுமே பயன்படுத்தியுள்ளார் (லூக்கா - லூக்கா நிருபம், அப்போஸ்தலர் நடபடிகள். பவுல் - புதிய ஏற்பாட்டின் பெரும்பாலான நிருபங்கள்). இவர்கள்

**வேதம் சோம்பேரிகளுக்குச் சொந்தமானதல்ல**
**— ஏ. டபிள்யு. பின்க் —**

**பிரசங்கம்**

இருவருமே அதிகமாகப் படித்தவர்களாயிருந்ததுடன், மொழிவன்மையுடையவர்களாக இருந்ததையும் கவனிக்க வேண்டும். கர்த்தர் வேதத்தை ஏனோதானோவென்று எழுதி முடிக்கவில்லை. கல்வியிலும் ஞானத்திலும் தேர்ந்தவர்களைக் கொண்டே அவற்றை எழுத வைத்துள்ளார்.

வேதத்தில் நமக்கு நல்லறிவு தேவையானால், அதை நல்லவிதமாகப் போதிக்க வேண்டுமானால் நமக்கு தமிழறிவு அவசியம். தமிழ் இலக்கண அறிவும் அவசியம். சிலர் வேதத்தை படிக்காமல், ஆவியானவர் வல்லமையாக திடீரென செய்திகளை எப்போதும் வாரி வழங்குவார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு போதகர் பல்கலைக் கழகத்திற்குப் போகாதவராக இருந்தாலும், வேதத்தைக் கவனத்தோடு, கடும் முயற்சியெடுத்துப் படித்துப் போதித்தால் நிச்சயம் ஆவியானவரின் ஆசீர்வாதம் அவருக்கு உண்டு. ஆனால் ஒருவர் படித்தவராக இருந்தாலும், வேதத்தை முறையாகப்படிக்காமல் போதித்தால் கர்த்தர் நிச்சயம் அவரையோ, அவர் தரும் செய்தியையோ ஆசீர்வதிப்பார் என்று ஒருபோதுமே எதிர்பார்க்க முடியாது. ஆகவே, வேதத்தைப் படிப்பதற்குத் தேவையான அனைத்திலும் நமக்கு பாண்டித்தியம் ஓரளவு தேவை. தமிழ்ப் போதகர்களுக்கு தமிழறிவும், இலக்கண அறிவும் ஏன் தேவை என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. கிரேக்க, எபிரேய மொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள வேதத்தை இலக்கணச் சுத்தமாகத் தமிழில் போதிக்க வேண்டிய பெருங்கடமை போதகர்களுக்கு உண்டு. வேதத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு போதித்தால், அது கர்த்தருடைய வார்த்தையைக் களங்கப் படுத்தும் செயலாகும். உதாரணத்திற்கு, 1 கொரிந்தியர் 14 வது அதிகாரத்தில் 26 ஆம் வசனத்தை எடுத்துக் கொண்டால், அதை மேலெழுந்த வாரியாக வாசிக்கும்

# ஜோன் ஓவன்

## "பியூரிட்டன்களின் இளவரசர்"

ஜோன் ஓவனைப் "பியூரிட்டன்களின் இளவரசர்" என்று வரலாறு அழைக்கிறது. அதற்குக் காரணம் ஓவனின் ஆற்றலும், வேத ஞானமும், பரிசுத்த வாழ்க்கையும் தான். பண்ணிரெண்டு வயதில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தனது இளமைக்காலக் கல்வியை ஆரம்பித்து, பின்பு அங்கேயே உதவித் தலைவராகவும், பல்கலைக்கழகத்தின் நடத்துனராகவும் பதவியேற்று, குரோம்வெல்லுக்கும் (Cromwell) ஆலோசகராகப் பணிபுரியுமளவுக்கு வாழ்க்கையில் உயர்ந்து சபை வரலாற்றில் முக்கிய இடத்தை ஓவன் பெற்றுக் கொண்டார். பியூரிட்டன்களில் தலைசிறந்த இறையியல் அறிஞராகவிருந்த ஓவன் சவோய் விசுவாச அறிக்கையைத் தயாரிப்பதற்கு துணைநின்றவர்களில் ஒருவர். ஓவன் திறமைவாய்ந்த போதகராகவும், எழுத்தில் வல்லவராகவும் இருந்தார். அவரது நூல்கள் இன்றும் அநேக ஆத்துமாக்களுக்கும், சபைகளுக்கும் பேருதவியாக உள்ளன. ஓவனின் எழுத்துக்கள் பதினேழு வால்யூம்களாக இன்றும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. போதகர்கள் போதக சமர்த்தர்களாகவும், இறையியல் அறிஞர்களாகவும், பரிசுத்தத்தில் தேர்ந்தவர்களாகவும் இருக்க, இருபது இறையியல் கல்லூரிகள்கூட ஓவனின் நூல்கள் செய்யக்கூடிய உதவியைச் செய்ய முடியாது. கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு, கிறிஸ்துவின் மகிமை, சுவிஷேச சபையின் மெய்த்தன்மை, இறைவனோடு ஐக்கியம் போன்ற நூல்கள் ஓவனின் இறையியல் ஞானத்தையும், இறை பக்தியையும் வெளிப்படுத்துவதில் சிறந்தவை. ஓவனின் நூல்களில் ஒரு சிலவே இன்று தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு இவற்றில் ஒன்று. ஓவன் திருச்சபைக்கு விட்டுச் சென்றுள்ள சொத்து அவரது அழியா எழுத்துக்களே.

## பிரசங்கம்

**கிரேக்க, எபிரேய மொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ள வேதத்தை இலக்கணச் சுத்தமாகத் தமிழில் போதிக்க வேண்டிய பெருங் கடமை போதகர்களுக்கு உண்டு.**

போது பவுல் அவ்வசனத்தில் கூறப்பட்ட காரியங்களை சபையில் செய்யும்படிக் கொரிந்தியர்களுக்குக் கூறுவதுபோல் தென்படும். ஆனால், அவ்வசனம் காணப்படும் சந்தர்ப்பப் பொருத்தமும், பவுலின் மொழி நடையும் வேறொரு உண்மையைப் போதிக்கின்றன. இங்கே பவுல் இக்காரியங்களைக் கொரிந்தியர்கள் செய்ய வேண்டுமென்று (priscriptive) வற்புறுத்தாமல், சபை கூடிவரும் போது இவ்வாறாகத்தான் நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்று சபையில் நடப்பதை விவரிக்கிறார். ஆங்கிலத்தில் இதனை discriptive language என்று கூறுவார்கள். அதாவது விபரித்துக் கூறும் மொழி நடை என்று பொருள்.

இதேவிதமாக இந்நூலில் பவுல் மிகைப்படுத்தலையும் (Retoric language) தனது மொழிநடையில் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார். உதாரணமாக 13 ஆவது அதிகாரம் முதல் வசனத்தில் பவுல் தேவபாஷையைப்பற்றிக் குறிப்பிடுகிறார். அநேகர் இதற்குப் பொருள் கொடுக்கும்போது தேவ பாஷை என்று ஒன்றிருப்பதாகப் பொருள் கொள்வார்கள். ஆனால், முழு அதிகாரத்தையும் வாசித்துப்பார்ப்பதோடு, சந்தர்ப்பப் பொருத்தத்தையும் கவனித்தால் பவுல் இங்கே மிகைப்படுத்தும் மொழி நடையைப் பயன்படுத்துவதைக் காணலாம். தேவ பாஷை என்று உண்மையில் ஒன்றில்லை. தேவர்கள் மனிதர்களோடு பேசியபோதெல்லாம் மனிதர்கள் புரிந்து கொள்ளக்கூடிய பாஷையில்தான் பேசியிருக்கிறார்கள். பவுலுக்குத் தேவ பாஷை என்று ஒன்றிருப்பதாகத் தெரியாது. தான் சொல்ல வந்ததை அழுத்தமாகக் கூறுவதற்காக இல்லாம விருப்பதை இருப்பது போல் எண்ணிப் பேசுவதையே மிகைப்படுத்தும் மொழிநடை என்று கூறுவார்கள். இதைத்தான் பவுல் இங்கு கையாண்டுள்ளார். இதை 1 கொரிந்தியரில் பவுல் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளதைப் பார்க்கலாம். ஆகவேதான், இதைப்புரிந்துகொண்டு விளக்கமாகப் போதிக்க தமிழ் அறிவும், இலக்கணமும் நமக்குத் தேவைப்படுகிறது. இலக்கண அறிவில்லாமல் இதை எடுத்துவிளக்குவதென்பது இயலாத காரியம். ஆரம்ப காலத்தில் தமிழர்கள் மத்தியில் ஊழியம் செய்ய வந்த வெளிநாட்டு மிஷனரிகள் தமிழையும், இலக்கணத்தையும் தெளிவாகப் படிக்க வேண்டியிருந்தது. கேரி இதில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். ஆனால் தமிழர்களாக இருந்தும் தமிழ்ப் போதகர்களில் பலர் இன்று தமிழ் மொழியிலோ, இலக்கணத்திலோ அதிகம் கவனம் செலுத்துவதில்லை. ஆங்கிலத்திலே நூல்களை வாசித்துப் புரிந்து கொள்பவர்கள்கூட அதைத் தமிழிலே விளக்கிக் கூறுவதற்கு தமிழ் அறிவும், இலக்கண அறிவும் மிக அவசியம். போதிப்பவனின் போதனை தெளிவாக இருக்க வேண்டுமானால் இதைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

வியாக்கியானப் பிரசங்கம் செய்வதற்கு அவசியமான பல விபடங்களைப்பற்றி விபரமாகப் பார்த்துள்ளோம். இன்று நமது மக்களை ஏமாற்றி வரும் அநேக போலிப் போதனைகளில் இருந்து அவர்களை விடுவித்து கர்த்தரின் வழியில் அவர்களை வழி நடத்தும் பெரும் அழைப்பைப் பெற்றுக் கொண்டுள்ள இதை வாசிக்கும் போதகர்கள் இதுவரை நாம் பார்த்து வந்துள்ள காரியங்களைக் குறித்து சிந்தித்து செயல்பட வேண்டும். அதேவேளை போதக ஊழியம் செய்வது பெருமையானது என்று எண்ணி, கனவுலக எண்ணங்களோடு அதில் நுழைந்துள்ளவர்கள் இவ்வூழியத்தைத் துறந்து விடுவதும் நன்மையான காரியம். உண்மையான அழைப்பில்லாமலும், பிரசங்கம் செய்வதற்குத் தேவையான ஞானமோ, திறமையோ இல்லாமலும் அவ்வூழியத்தில் ஈடுபட்டு கர்த்தருக்கு சேவை செய்கிறோம் என்ற எண்ணத்தில் இருப்பவர்கள் இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிகமாக இருக்கிறார்கள். கடுமையாக அன்றாடம் தாழ்மையுடன் உழைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையோடும், துணையோடும் செய்ய வேண்டிய இவ்வூழியத்தைக் களங்கப்படுத்தி கர்த்தரின் சாபத்தை வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதேவேளை மெய்யான ஊழியர்கள் குறைவாக இருக்கும் இக்காலங்களில் கர்த்தர் அத்தகைய ஊழியர்களை எழுப்புமாறு நாம் அன்றாடம் ஜெபத்தில் வரவேண்டியதும் அவசியம்.

> ஒரு போதகன் படிக்க வேண்டும். படிக்காத போதகனால் வளரமுடியாது; கிறிஸ்துவின் மெய்யான சேவகனாகவும் வாழ முடியாது
>
> - தொமஸ் மாரி -

# செய்தித் துணுக்குகள்...

இன்று வேதப்புத்தகத்தை வெளியிடும் அநேக வெளியீட்டு நிறுவனங்கள் இதுவரை ஆண்பாலில் இருந்து வந்த வார்த்தைகளைக், கர்த்தரின் பெயர் உட்பட ஆண், பெண்ணாகிய இருபாட்களையும் குறிக்கும் விதமாக (பிதா, அம்மை) மாற்றி வெளியிட்டு வருகிறார்கள். இது இன்று ஆங்கிலத்தில் வெளியிடப்படும் வேதப்புத்தகங்களில் அதிகமாக நிகழ்ந்து வருகிறது. கிறிஸ்தவத்தை தாக்கும் பெண்ணீயத்தின் (Feminism) இம்முயற்சி இதுவரை தமிழ் வேதத்தைப் பாதிக்கவில்லை. பிரபலமான நியூ இன்டர்னேசனல் (NIV) வேதப்புத்தக வெளியீட்டாளர்களான சொன்டர்வன் (Zondervan) பதிப்பகத்தார் புதிய சர்வதேச எல்லாம் உள்ளடக்கிய மொழி (New International Version Inclusive Language) என்ற பெயரில் ஹொடர் & ஸ்டவுட்டன் நிறுவனத்தின் மூலம் பிரிட்டனில் இத்தகைய வேதப் புத்தகத்தை வெளியிட்டுள்ளார்கள். அமெரிக்காவில் இதற்கெதிராக அதிக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் அங்கே இது வெளியிடப்படவில்லை. அத்தோடு இவ்வெதிர்ப்புக்கு அஞ்சி இதனைத் தொடர்ந்தும் வெளியிட மாட்டோம் என்று வாக்குக் கொடுத்துள்ள இவ்வெளியீட்டு நிறுவனம் இதுவரை பிரிட்டனில் வெளியிடப்பட்ட வேதப் புத்தகங்களை மீளப் பெறவில்லை. பணத்திற்காக எதையும் செய்ய முனையும் இவர்களைத் தொடர்ந்தும் நம்ப முடியுமா?

உலக கிறிஸ்தவ நிறுவனங்களின் தாயகமான அமெரிக்காவில் புதிதாக உருவெடுத்துள்ள இன்னுமொரு கிறிஸ்தவ நிறுவனம் வாக்குறுதிகளைக் காப்பாற்றுகிறவர்கள் (Promise Keepers) எனும் இயக்கம். கடந்த வருடம் அமெரிக்காவின் பெரிய நகரங்களில் மாபெரும் கூட்டங்களை நடத்திக் காட்டியுள்ள இந்நிறுனத்தின் தலைவரான பில் மெக்காட்னி சமீபத்தில் 375 பேரை வேலையிலிருந்து நீக்கியுள்ளார். 72% வருமானத்தைக் கடந்த ஒக்கோபரிலிருந்து இழந்துள்ள நிறுவனம் இப்போது ஒவ்வொரு சபையையும் நிறுவனத்திற்கு 1000 டாலர்களைக் கொடுக்கும்படிக் கர்த்தர் கட்டளையிட்டுள்ளதாகக் கூறுகிறது. இவ்வியக்கம் ஆண்களுக்கு மட்டுமான இயக்கம். கிறிஸ்தவ ஆண்கள் மத்தியில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும்படி வலியுறுத்துவது இதன் முக்கிய நோக்கம். ஆனால், இது பெண் போதகர்களை ஆதரிக்கிறது. புதிது புதிதாகக் கர்த்தரின் பெயரைச் சொல்லி சபைக்கு மதிப்புக் கொடுக்காமலும், வேதக்கோட்பாடுகள் எதுவுமில்லாமலும், காளான்கள் போல் தோன்றிக் காளான்களைப் போல் மறையும் நிறுவனங்களைக்குறித்து கிறிஸ்தவர்கள் எச்சரிக்கையாய் இருப்பது நல்லது.


மேலை நாடுகளில் இன்று ஆண், ஆணுடனும் (Homosexual), பெண், பெண்ணுடனும் (lesbian) உடலுறவு கொள்வது சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகஜமான செயலாகவுள்ளது. அத்தகையோர் திருமணம் செய்து கொள்ளும் உரிமைக்காகவும் போராடி வருகிறார்கள். இத்தகைய உறவு முறையைக் கடைப்பிடிக்கும் ஆண், பெண் போதகர்கள் தொடர்ந்து போதக ஊழியம் செய்யலாம் என்ற எண்ணத்தை ஆங்கிலிக்கன், பிரஸ்பிடீரியன், மெதடிஸ்ட் போன்ற சமயக்குழுக்களில் காண முடிகின்றது. இச் சமயக்குழுக்களில் சில, இவ்வாறான உறவு முறையைக் கடைப்பிடிப்பவர்கள் ஊழியத்திலிருக்கும்போது அதைச் செய்யாதவரை தொடர்ந்து ஊழியம் செய்யலாம் என்றும் கூறுகின்றன. கர்த்தரின் வேதத்தையும், பத்துக் கட்டளைகளையும் என்றோ புறக்கணித்துவிட்ட இச்சமயக் குழுக்களின் மத்தியில் இனியெங்கு சீர்திருத்தத்தை எதிர்பார்க்க முடியும்.

## *வாசகர்கள் கவனத்திற்கு!*

*வாசகர்கள் தங்கள் முகவரி மாறும்போது தயவுசெய்து உடனடியாக புதிய முகவரியை எங்களுக்குத் தெரிவிக்கவும். அது பத்திரிகை உங்களைத் தொடர்ந்து அடையத் துணை செய்யும். அத்தோடு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். முக்கியமாக தமிழகத்து வாசகர்கள் மாவட்டத்தையும், பின் இலக்கத்தையும் குறிப்பிடத் தவறாதீர்கள்.*

**ஜே. ஐ. பெக்கர் ஜோன் ஓவனின் நூலுக்கு வழங்கிய முன்னுரை**

# கிருபையின் கோட்பாடுகள்



- ஓர் அறிமுகம் -

## கிருபை

**நாங்கள் எங்களை கல்வின் கோட்பாட்டாளர் என்று அழைத்துக் கொள்கிறோமா? இல்லையா? என்பதல்ல முக்கியம்; நாம் சுவிஷேசத்தை வேதபூர்வமாக விளங்கிக் கொண்டிருக்கிறோமா? என்பதே முக்கியம்.**

நமது கேள்வியாளர், "நீங்கள் சுவிஷேசத்தை மீளப்பெறுவதைப்பற்றி அல்லவா பேசப் போகிறேன் என்று கூறினீர்கள்; ஆனால் நீங்கள் போகிற போக்கைப் பார்த்தால் நாங்கள் எல்லோரும் கல்வின் கோட்பாடுகளைப்பின்பற்ற வேண்டும் என்பதுதான் உங்கள் விருப்பம் போலல்லவா தெரிகிறது" என்று நம்மைப் பார்த்து வினாவுகிறார்.

நாங்கள் எங்களை கல்வின் கோட்பாட்டாளர் என்று அழைத்துக் கொள்கிறோமா? இல்லையா? என்பதல்ல முக்கியம்; நாம் சுவிஷேசத்தை வேதபூர்வமாக விளங்கிக் கொண்டிருக்கிறோமா? என்பதே முக்கியம். அதாவது, வரலாற்றுக் கல்வினீயம் அதனை எவ்வாறு விளங்கிக் கொண்டுள்ளதோ, அவ்வாறே நாம் அதனை விளங்கிக் கொண்டிருப்பது அவசியம். இல்லாவிட்டால் நாம் சுவிஷேசத்தை தவறாக விளங்கிக் கொண்டு அதைத் திரித்துக்கூறுபவர்களாகிவிடுவோம். நவீன சுவிஷேசக் கோட்பாடு (Modern Evangelicalism) பழைய பாதையில் சுவிஷேசத்தைப் பிரசங்கிப்பதை ஒரேயடியாக நிறுத்திவிட்டது என்று நாம் ஏற்கனவே கூறியுள்ளோம். அதேவேளை, பழைய பாதையில் இருந்து விலகி நிற்கும்வரை, புதிய சுவிஷேசமும் வேதபூர்வமான சுவிஷேசத்தினை திரிபு படுத்திப்போதிக்கின்றது என்பதை நாம் வெளிப்படையாகவே கூறுகிறோம்.

இதில் தவறு எங்கே ஏற்பட்டுள்ளது என்று ஒருவகையில் இப்போது நமக்குப் புரிகிறது. அதாவது நமது இறையியல் நாணயத்தின் மதிப்பை புதிய சுவிஷேசத்தைப் போதிப்பவர்கள் குறைத்திருக்கிறார்கள். சிலுவையைப் பற்றித் தவறான விதத்தில் சிந்திக்கும்படி இவர்களது மனம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இரட்சிப்பை முழுமையாக அளிக்க முடியாததாக மீட்பையும், இரட்சிப்பை நமக்கு முழுமையாக அளிக்க முடியாத ஒரு இரட்சகராக கிறிஸ்துவையும், பிறருடைய துணையின்றி எவரையும் நரகத்தில் இருந்து காப்பாற்ற முடியாத ஒரு பலவீனமான உணர்ச்சியாக கடவுளின் அன்பையும், இதையெல்லாம் நிறைவேற்ற, கடவுளுக்குத் தேவையான மனிதனின் துணையே விசுவாசம் என்றும் சிந்திக்கும்படியாக இவர்களது மனம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் முடிவாக, வேதபூர்வமான சுவிஷேசத்தை விசுவாசிக்கவோ, பிரசங்கிக்கவோ சுயாதீனமற்ற நிலையில் இவர்கள் உள்ளார்கள். பலவிதமான எண்ணங்களினால் பீடிக்கப்பட்டு இவர்களது மனம் குழம்பிப் போயிருக்கின்றது. விசுவாசம், அவிசுவாசம் ஆகிய இரண்டும் பொறுப்புடைய செயல்களாக இருப்பின், அவை தன்னிச்சையான செயல்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற ஆர்மீனியப் போதனையால் இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, கல்வாரியில் இருந்து புறப்பட்டு வரும், தேவனுடைய ஈவாகிய விசுவாசத்தின் மூலமாக, பூரணமாக தேவகிருபையானால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை இவர்கள் விசுவாசிக்க சுயாதீனமற்ற நிலையில் உள்ளார்கள். இதனால், ஒரு தடுமாற்றமான இரட்டைச் சிந்தனைக்குள் தம்மைத் தாமே சிக்கவைத்துக் கொண்டுள்ளார்கள். அதாவது, இரட்சிப்பு முழுதும் கடவுளிலேயே தங்கியுள்ளது என்று ஒரு சமயத்திலும், அது நம்மிலேயே தங்கியிருக்கிறது என்று இன்னொரு சமயத்திலும் கூறும் ஒரு தடுமாற்ற சிந்தனைப் போக்கிற்கு இவர்கள் தம்மை உட்படுத்திக் கொண்டுள்ளார்கள். இவர்களைப் பீடித்துள்ள இத்தகைய மனக்குழப்பம், இரட்சிப்பைத் தொடக்குகின்றவரும், முடிக்கின்றவருமாயிருக்கின்ற கடவுளுக்கு இவர்கள் கொடுக்க வேண்டிய மகிமையைக் கொடுக்க முடியாமல் செய்வதோடு, கடவுள் நமக்காக இருக்கின்றார் என்பதை அறிவதில் இருந்து இவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆறுதலையும் அடைய முடியாமல் செய்கின்றது.

சுவிஷேசத்தைப்பற்றி இவர்கள் கொண்டுள்ள இத்தகைய தவறான எண்ணங்கள், சுவிஷே சத்தைப் பிரசங்கிக்கும்போது இவர்கள் நினைப்பதற்கு எதிர்மாறானதைச் சொல்லும்படிச் செய்கிறது. அதாவது, கிறிஸ்து இரட்சகர் என்றே இவர்கள் சொல்ல விரும்புகிறார்கள்; ஆனால், கிறிஸ்து நாம் இரட்சிப்பை அடைவதற்கு ஏதுவான ஒரு நிலையை மட்டும் ஏற்படுத்தி, நம்மை நாமே இரட்சித்துக் கொள்ளும்படியாகச் செய்தார் என்று கூறி முடிக் கிறார்கள். இது எவ்வாறு நிகழ்கிறதென்று கூர்ந்து நோக்குவோம்: உண்மையில், தேவனு டைய இரட்சிக்கும் கிருபையையும், கிறிஸ்துவின் இரட்சிக்கும் வல்லமையையும் மென்மை ப்படுத்தவே இவர்கள் விரும்புகிறார்கள். எனவே, தேவனுடைய மீட்கும் அன்பு ஒவ் வொரு மனிதனுக்குமானது என்றும், கிறிஸ்து, ஒவ்வொரு மனிதனையும் மீட்கும்படி யாகவே மரித்தார் என்றும் அறிவிக்கின்றார்கள். அத்தோடு, தெய்வீக இரக்கத்தின் மகிமை, இந்த உண்மைகளினாலேயே மதித்துணரப்பட வேண்டும் என்றும் பறைசாற்றுகின் றார்கள். அதன்பின், இவ்வாறு போதித்தால் அது உலகளாவிய இரட்சிப்பு (மனித இனம் முழுவதற் கும் மீட்பு என்று போதிக்கும்) எனப்படும் போதனையாகிவிடுமே என்ற பயத் தில், அதனைத் தவிர்க்குமுகமாக முன்பு உயர்வாகக்கூறிய எல்லாவற்றையும் இகழ்ந்து, கடவுளும், கிறிஸ்துவும் செய்து முடித்த அனைத்துமே, நாம் அவற்றோடு முக்கியமான தொன்றை சேர்க்காதபட்சத்தில் நம்மை இரட்சிக்க முடியாது என்று கூறிவிடுகிறார்கள். அதாவது, இவர்களைப் பொறுத்தவரையில், நம்மை இரட்சிக்கும் முக்கியமான அச்செயல் நமது சுயவிசுவாசமே. இதுவரை நாம் விளக்கியதன் பொருள் என்னவென்றால் - நமது உதவியின் அடிப்படையிலேயே கிறிஸ்து நம்மை இரட்சிக்கிறார் என்பதாகும். இதை மேலும் ஆராய்ந்து பார்த்தால் - கிறிஸ்துவின் துணையோடு நம்மை நாமே இரட்சித்துக் கொள்கிறோம் என்பதே இதற்குப் பொருள்.

கடவுளுடைய இரட்சிக்கும் அன்பு எல்லோருக்கும் சொந்தமானது என்றும், கிறிஸ்து எல்லோரையும் இரட்சிக்கும்படியாக மரித்தார் என்றும் கூற ஆரம்பித்துவிட்டு பின்பு, இது உலகளாவிய இரட்சிப்பு என்ற போதனையாகிவிடுமே என்று கூக்குரலிடுவதால் எந்தப் பயனுமில்லை. ஆகவே, மேலே நாம் விவரித்த போதனையால் ஏற்படும் பாதிப்பை நாம் தெளிவாக உணர வேண்டும். இப்போதனையின் மூலம் கிருபையையும், சிலுவையையும் இவர்கள் உயர்த்திக் காட்டவில்லை; அவற்றின் மதிப்பைக் குறைத்துக் காட்டுகிறார்கள். கல்வினீயத்தைவிட அதிகமான அளவிற்கு, பாரதூரமாக கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தை மட்டுப்படுத்துகிறார்கள். கல்வினீயமோ, கிறிஸ்துவின் மரணம் எவரை இரட்சிக்கும் நோக்கத்தைக் கொண்டிருக்கின்றதோ, அவர்கள் அனைவரையும் நிச்சயமாக இரட்சிக்கும் என்று போதிக்கின்றது. இவர்களோ, கிறிஸ்துவின் மரணம் இவர்களில் எவரையுமே இரட்சிக்கப் போதுமானதல்ல என்று போதித்து, கிறிஸ்துவின் மரணத்தை நிராகரிக்கிறார் கள். தேவனால் பாவிகளை மனந்திரும்பவும், விசுவாசிக்கவும் வைக்க முடியாது என்றும், அவர்களுடைய சுயவல்லமையிலேயே அவற்றை அடைய முடியும் என்று கூறுவதன் மூலம் மனந்திரும்பாத பாவிகளை இவர்கள் தவறாக வழிநடத்துகிறார்கள். இத்தகைய உறுதியை அளிப்பதற்காக இவர்கள் விசுவாசத்தையும், மனந்திரும்புதலையும்கூட அற்ப மானவைகளாக்கியுள்ளார்கள். அதாவது, “இது மிகவும் இலகுவான செயல், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் இருதயத்தைத் திறக்க வேண்டியது மட்டுமே” என்று பாவிகளை நோக்கி மிக சாதாரணமாகக் கூறிவிடுகிறார்கள். இதன் மூலம் நாம் தேவ னுடைய இறைமைத்துவத்தை (Sovereignty) முற்றாக நிராகரித்து, மனிதன் எப்போதுமே கடவுளுடைய கரத்திலேயே இருக்கிறான் - என்ற கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கை யையும் தகர்த்துவிடுகிறார்கள். உண்மையில் இவர்களுடைய போதனையால் ஏற்படும் இழப்பு அதிகமானது. இதனால்தான் இன்று பிரசங்கங்கள் தாழ்மையையும், மதிப்பையும் பெறாதிருப்பதோடு, மனந்திரும்பியவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்பவர்களும் அளவுக்குமீறிய சுய நம்பிக்கையுடையவர்களாகவும், சுய அறிவிலும், வேதம்போதிக்கும் மனந்திரும்புதலின் மெய்யான நற்கனிகள் என்று அழைக்கப்படுகின்ற நற்கிரியைகளிலும் குறைவுடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

**கிருபை**

**கல்வினீயமோ, கிறிஸ்துவின் மரணம் எவரை இரட்சிக்கும் நோக்கத்தைக் கொண்டிருக்கின்றதோ, அவர்கள் அனைவரையும் நிச்சயமாக இரட்சிக்கும் என்று போதிக்கின்றது.**

**வேதப் புத்தகத்தை தன் இருதயத்திலும், நாவிலும் கொண்ட மனிதன் இஸ்ரவேலின் மகாவீரன். அவனோடு எதிர்த்து நிற்க முடியாது. எதிரி மிகுந்த கல்விமானாயிருந்தாலும் வேத அறிவினால் நாம் அவனை வெல்லலாம். வேதப் புத்தகத்திற்கு நிகரான பட்டயம் இல்லை.**

– சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் –

# கிறிஸ்தவ இறையியல்



## – அறிமுகம் –

**இறையியல்**

***இறையியலற்ற ஒரு கிறிஸ்து இருக்க முடியாது. அவ்வாறு வேதம் கிறிஸ்துவைப் பற்றிப் போதிக்கும் சத்தியங்களை ஒதுக்கி வைத்துவிட்டு கிறிஸ்துவைப் பற்றி எவரும் போதிக்க முற்பட்டால் அது கிறிஸ்தவ போதனையாக இருக்க முடியாது.***

இறையியல் படித்தவர்களுக்கும், ஞானமுள்ளவர்களுக்கும் சொந்தமானது. பொழுதுபோவதற்கு ஒரு நல்ல சாதனம், ஆனால் ஆவிக்குரிய வாழ்க்கையில் அக்கறையுள்ளவர்கள் இறையியலின் வாசற்படியைக்கூட நாடக்கூடாது, அது அவர்களுடைய ஆன்மீக வாழ்க்கைக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்றவிதமான எண்ணங்களையெல்லாம் இன்று பலரும் கொண்டிருக்கிறார்கள். லிபரல் கோட்பாட்டாளர் நிச்சயமாக இவ்வெண்ணங்களுக்கு மூலகாரணமாக இருந்துள்ளார்கள். லிபரலிஸம் சமயக்குழுக்களில் பரவத்தொடங்கி வேதத்தில் மக்களுக்கிருந்த நம்பிக்கையைத் தகர்க்கத்தொடங்கியதும் இறையியலிலேயே மக்களுக்கு சந்தேகம் ஏற்படத் தொடங்கி அதிகப்படிப்பு புத்திக்குதவாது என்ற எண்ணத்தில் பலரும் அதில் கவனம் செலுத்துவதில் அக்கறை காட்டவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தலைதூக்கிய சுவிஷேச இயக்கத்தைப்போல் தோற்றமளித்த புதிய சுவிஷேச இயக்கமும், நவீன கெரிஸ்மெட்டிக் இயக்கமும் இத்தகைய எண்ணங்களை இனிப்பூட்டி வளர்த்தன என்றால் மிகையாகாது. இவ்வியக்கங்களின் தாக்கத்தால் இன்று பிரசங்கம், போதனை என்ற பெயரில் இறையியலற்ற, உப்புச் சப்பில்லாத, ஆவிக்குரிய வாழ்க்கையில் எந்த வளர்ச்சியையும் ஏற்படுத்த முடியாத, காதுக்கு மட்டும் குளிர்ச்சி தரும் வெறும் பேச்சுக்களை சபை சபையாக இன்று கேட்க முடிகின்றது.

பிரின்ஸ்டன் செமினரியில் இருந்து விலகி பின்பு வெஸ்ட்மின்ஸ்டர் இறையியல் கல்லூரி தோன்றுவதற்கு வித்திட்டவர்களில் ஒருவரான கிரேஷம் மேகன் (Gresham Machen) இந்நிலைமையைப் பின்வருமாறு வர்ணிக்கிறார்: "கடவுளைப் பற்றிய கோட்பாடுகளையோ, ஞானத்தையோ, இறையியல் அறிவையோ கொண்டிருக்கக் கூடாதென்று கூறுபவர்கள் இக்காலத்தில் நம்மத்தியில் அநேகம். இறையியல், ஆன்மீக வாழ்விற்கு அழிவைத்தேடித் தரக்கூடியது என்பது இவர்களது வாதம். இறையியல் அறிவல்ல நமக்குத் தேவை; இறையனுபவமே சகல காலத்துக்கும் தேவையானது என்பார் இவர். இவர்கள் கூறுவதுபோல், ஆன்மீக வாழ்க்கையென்பது இறைவனைப்பற்றி நமக்கேற்படும் வெறும் உணர்வுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருந்தால் அது எந்தவிதமான ஒழுக்க ரீதியான அதிகாரத்தையும் தன்னில் கொண்டிராததாகவே இருக்கும். கோட்பாடுகளற்ற வெறும் அனுபவம் என்று ஒன்றில்லை. அவ்வாறு ஒன்றிருந்தாலும், அது ஒழுக்கமானதாக, நீதியுள்ளதாக இருக்க முடியாது. உதாரணத்திற்கு ஒரு நண்பன் மீது நமக்கிருக்கும் அளவற்ற அன்பிற்குக் காரணமாக அமைவது அவனைப்பற்றி நாம் கொண்டிருக்கும் நல்ல அபிப்பிராயங்களே. ஆகவே, நமது நண்பனைக்குறித்து நம்மில் ஏற்படும் இச்சாதாரண அனுபவமயமான உணர்வுகளுக்கு அடிப்படையே அவனைப் பற்றி நமக்குள்ள அறிவுதான். எனவே, மனிதருக்கிடையில் ஏற்படும் உறவுமுறை அனுபவங்களுக்கே அவர்களைப்பற்றி நாம் கொண்டுள்ள அறிவுபூர்வமான அபிப்பிராயங்கள் அவசியமாக இருக்கும்போது, அறிவின் அடிப்படையில் கடவுளோடு ஏற்படும் தொடர்பில் மட்டும் எந்தத்தவறிருக்க முடியும்? நமது கர்த்தரைப்பற்றி யாராவது இழிவாகப் பேசுவதை நம்மால் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்க முடிகிறபோது, நமது நண்பர்களைப்பற்றி யாராவது தவறாகப் பேசினால் நமக்கு ஆத்திரம் ஏற்படுவது மட்டும் எப்படி முறையாகும்? கர்த்தரைப்பற்றி நமக்குள்ள அறிவே கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பதால், நாம் கர்த்தரைப் பற்றி எத்தகைய அறிவைப்பெற்றிருக்கிறோம் என்பது நம்மில் ஒரு பெரும் மாற்றத்தையே ஏற்படுத்துகிறது." என்ற மேகனின் இவ்வார்த்தைகள்தான் எத்தனை பொருள் பொதிந்தவை.

## இறையியல் என்றால் என்ன?

இறையியல் என்பது இறைவனைப்பற்றிய கோட்பாடுகளாகும் (இறை + இயல்). கர்த்தர் தம்மைப்பற்றி வெளிப்படுத்தியுள்ளவைகளை வரையறுத்து ஒழுங்கு படுத்திப் படிப்பதையே இறையியல் என்கிறோம். எனவே அத்தகைய ஒழுங்கமைப்புடைய பாடம் எல்லோருக்குமே அவசியம் தேவை. நீதிமொழிகள் 9:10, "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு" என்று வாசிக்கிறோம். பரிசுத்தரைப்பற்றிய அறிவே மெய்யான அறிவாகும்; அத்தகைய அறிவே கிறிஸ்தவ வாழ்க்கைகுத் தேவையான அனுபவ பூர்வமான நடைமுறை ஞானத்தையும் தரும். இதையே நீதிமொழிகள் எங்கும் எடுத்துரைக்கிறது.

மெய்க் கிறிஸ்தவனுக்கு இறைவனைப்பற்றிய கோட்பாடுகள் ஒருபோதும் உப்புச் சப்பற்றதாக இருக்க முடியாது. வேதபூர்வமான இறையியலை நாம் வேதத்தி லிருந்தே பெற்றுக் கொள்கிறோம். இறையியலற்ற கிறிஸ்தவ போதனை என்பது முரண்பாடுள்ள ஒரு வார்த்தைப் பிரயோகமாகும். ஏனெனில் அப்படி ஒன்று உண்மையில் இருக்க முடியாது. சிலர் கிறிஸ்துவை மட்டுமே போதிக்க வேண்டும். வேறு காரியங்கள் அவசியமில்லை என்று ஆணவத்துடன் கூறுவார்கள். ஆனால் கிறிஸ்து யார்? அவரைப்பற்றி வேதம் என்ன போதிக்கின்றது? என்ற கேள்விகளை நாம் கேட்கும்போது நாம் இறையியலுடன் தொடர்புடைய கேள்விகளையே கேட்கிறோம். இக்கேள்விகளுக்கு வேதம் அளிக்கும் பதில்களே கிறிஸ்துவைப்பற்றிய இறையியல் போதனைகளாக அமைகின்றன. எனவே இறையியலற்ற ஒரு கிறிஸ்து இருக்க முடியாது. அவ்வாறு வேதம் கிறிஸ்துவைப் பற்றிப் போதிக்கும் சத்தியங்களை ஒதுக்கி வைத்துவிட்டு கிறிஸ்துவைப்பற்றி எவரும் போதிக்க முற்பட்டால் அது கிறிஸ்தவ போதனையாக இருக்க முடியாது. இவர்களைப்பற்றிக் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் அத்தகையவர்கள் சபிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள் (கலாத்தியர் 1:6-9) என்று கூறுகிறார். ஏனெனில் வேதபூர்வமாக, வேதபோதனைகளின் அடிப் படையில் பிரசங்கிக்கப்படாத கிறிஸ்து வேதம் போதிக்கும் கிறிஸ்து அல்ல. அவ்வாறு போதிப்பவர்களும் மெய்ப்போதகர்களாக இருக்க முடியாது.

## இறையியல் அறிவின் அவசியம்

இறையியல் அறிவென்பது போதக ஊழியத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு மட்டுமே சொந்தமானது என்ற தவறான எண்ணத்தை நாம் கைவிட வேண்டும். உண்மையில் அது சபை மக்கள் அனைவருக்கும் தேவையான தாகும். பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் இதையே விளக்குகிறார். "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிரதுக்கெதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடி பட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்த்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக் கும்படியாக அப்படிச் செய்தார்." (எபேசி. 4:14-15)

இன்று கிறிஸ்தவர்களுக்கு இறையியல் போதனை அதிமுக்கியமாகத் தேவைப் படுகின்றது. வேத ஆதாரமற்ற உப்புச் சப்பற்ற பிரசங்கங்களும், போதனைகளும், மாயஜால வித்தைகளும், அதிகாரத்துஷ்ப்பிரயோகமும் மலிந்த தமிழ்க்கிறிஸ்தவ உலகில் மெய்யான கிறிஸ்தவம் தழைத்தோங்கி வளர தமிழ் கிறிஸ்தவ அன்பர் கள் கிறிஸ்தவ இறையியல் அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இன்று ஏற்பட்டுள்ளது. தனிமனித வழிபாடு, ஏமாற்று வித்தைகள் மலிந்து கிறிஸ்தவத் தின் பெயரில் உலவி வரும் போலித்தனத்தின் அடிமைத்தனத்தில் இருந்து கிறிஸ்தவர்கள் விடுபட இன்று கிறிஸ்தவ இறையியல் அவசியமாகின்றது. கிறிஸ்துவைப்பற்றியும், அவரது போதனைகளைப்பற்றியும் முறையான வேதபூர்வ மான அறிவைப் பெற்றுக் கொள்ளும்போது போலித் தனத்தின் அடிமைத்தளை யிலிருந்து நாம் விடுதலை அடைகிறோம். ஆகவே தான் பேதுரு, தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிஸ்துவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகக் கடவது (2 பேதுரு 1:2) என்று கூறியிருப் பதைப் பார்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், கிறிஸ்து போதிக்கும், கிறிஸ்தவ வாழ்க்கையின் மேன்மை, கிறிஸ்து தலையாகி இருந்து வளர்த்து வரும் திருச்சபை ஆகியவை பற்றியும்

**இறையியல்**

***இறையியல் அறிவென்பது, போதக ஊழியத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு மட்டுமே சொந்தமானது என்ற தவறான எண்ணத்தை நாம் கைவிட வேண்டும்.***

**இறையியல்**

வேதபூர்வமாக நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. வேத அதிகாரத்திற்கு கட்டுப்பட மறுத்து திருச்சபை குறித்த போதனைகளையெல்லாம் நிராகரித்து வேதம் அதைப்பற்றி ஒன்றுமே கூறாததுபோல் நடந்துவரும் கூட்டத்தின் கரத்தில் இருந்து கிறிஸ்தவர்கள் விடுபட்டு, கிறிஸ்து நேசிக்கும் சபை வாழ்க்கைக்கு வேதபூர்வமாகத் தங்களை ஒப்புக் கொடுக்க, கிறிஸ்தவ இறையியல் அறிவை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது. மேலும், கிறிஸ்தவ இறையியல் அறிவு எல்லாவிதமான போலிப்போதனைகளிலும் இருந்து நம்மைக் காப்பது மட்டுமன்றி மெய்ச்சத்தியத்தில் நமக்கு மேலான ஆர்வத்தையும், உறுதியையும் ஏற்படுத்தும்.

## முறைப்படுத்தப்பட்ட இறையியல் (Systematic Theology)

கிறிஸ்தவ இறையியலை நான்கு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம். அதனை விளக்கவுரை (Exegetical) இறையியல், முறைப்படுத்தப்பட்ட இறையியல், வரலாற்று இறையியல், போதக அல்லது நடைமுறை இறையியல் என்று வகுக்கலாம். இவற்றை மேலும் பல பகுதிகளாகவும் பிரிக்கலாம். கிறிஸ்தவர்கள் அனைவருக்குமே இவை எல்லாவற்றிலும் ஓரளவிற்கு பரிச்சயம் இருக்க வேண்டும். ஆனால், இவற்றில் முறைப்படுத்தப்பட்ட இறையியல் அறிவின் அவசியத்தையே நாம் இங்கு விவரிக்கப்போவதோடு அதன் அடிப்படையிலான போதனைகளையே இப்பகுதிகளில் தொடர்ந்து தரவிருக்கிறோம்.

முறைப்படுத்தப்பட்ட இறையியல் என்றால் என்ன? வேதத்தில் காணப்படும் எல்லா முக்கிய போதனைகளையும் சீராகத்தொகுத்து, முறைப்படுத்தித் தருவதே முறைப்படுத்தப்பட்ட இறையியலாகும். பொதுவாக எல்லாப் போதனைகளும் வேதத்தில் முறைப்படுத்தப்பட்டுக் கொடுக்கப்படவில்லை. அவை அனைத்தும் வேதத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரந்து காணப்படுகின்றன. இவற்றைத் தொகுத்தளிப்பதே முறைப்படுத்தப்பட்ட இறையியலின் சேவையாகும். உதாரணத்திற்கு படைப்பை எடுத்துக் கொண்டால் அது பற்றிய அனைத்துப் போதனைகளும் வேதத்தில் பரந்து காணப்படுகின்றன. வேதத்தை விளங்கிக் கொள்ளப்பயன்படும் விதிகளைப்பயன்படுத்தி வேதத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் படைப்பைப்பற்றிய போதனைகளை சரியாக விளங்கி, அவற்றைத் தொகுத்தளிப்பதே முறைப்படுத்தப்பட்ட இறையியலின் பங்காகும்.

அறிவீனத்தினால் இன்று சிலர் இத்தகைய இறையியலறிவை செயற்கையானதென்று விபரம் புரியாமல் நிராகரிப்பார்கள். ஆனால், வேதத்தில் பரந்து காணப்படும் போதனைகளை, வேதமே தனக்குள் கொண்டுள்ள, அதை விளங்கிக்கொள்ளப் பயன்படுத்த வேண்டிய விதிகளைப்பயன்படுத்தி, முறையாக விளங்கி, அவற்றை ஒவ்வொரு தலைப்பின் கீழும் தொகுத்துப்படிப்பதில் எந்தவிதத் தவறும் இல்லை. இதனால் வேதம் போதிக்கும் சகல போதனைகளையும் நாம் முறையாகப் புரிந்து கொள்ள முடியும். இத்தகைய முறைப்படுத்தப்பட்ட இறையியல் ஞானம் இன்று பெரும் பாலானோருக்கு இல்லாததாலேயே போலிப்போதனைகளுக்கு அவர்களால் தங்களை இரையாக்கிக் கொள்ள முடிகின்றது. ஆகவே, முறைப்படுத்தப்பட்ட இறையியலின் பெரும் அவசியத்தை நாம் உணர வேண்டும்.

## வரலாறு கண்டுள்ள இரு முறைப்படுத்தப்பட்ட இறையியல் போதனைகள்

***வரலாற்றில் இருவிதமான முறைப் படுத்தப்பட்ட இறையியல் போதனையை திருச்சபை பெற்றுக் கொண்டுள்ளது. வினாவிடைப் பயிற்சியும் (Catechism), விசுவாச அறிக்கையுமே (Confession of Faith) அத்தகைய முறைப் படுத்தப்பட்ட இறையியல் போதனை களாகும்.***

வரலாற்றில் இருவிதமான முறைப்படுத்தப்பட்ட இறையியல் போதனையை திருச்சபை பெற்றுக் கொண்டுள்ளது. வினாவிடைப்பயிற்சியும் (Catechism), விசுவாச அறிக்கையுமே அத்தகைய முறைப்படுத்தப்பட்ட இறையியல் போதனைகளாகும். முக்கியமாக சீர்திருத்த பாப்திஸ்துகள் உலகமெங்கும் பயன்படுத்தும் வினாவிடைப்பயிற்சியையே திருமறைத்தீபத்தில், கிறிஸ்தவக் கோட்பாடுகள் என்ற தலைப்பில் கேள்வி-பதில்களாக விளக்கக் குறிப்புகளோடு தொடர்ந்து திருச்சபைகளின் பயன்கருதி அளித்து வருகிறோம். இது பதினேழாம் நூற்றாண்டு பியூரிட்டன்களின் காலப்பகுதியில் திருச்சபைத் தலைவர்களால் எதிர்கால சந்ததியின் பயன்கருதி தொகுத்தளிக்கப்பட்டது. பாப்திஸ்துகளில் தலைசிறந்த போதகராக இருந்த ஸ்பர்ஜனும் தன்காலத்தில் இதன் அவசியத்தை உணர்ந்து தனது சபை வளர்ச்சிக்குப்பயன்படுமுகமாக

இதேபோல் ஒரு வினாவிடைப் போதனை முறையை வெளியிட்டார். இதனைப் பயன்படுத்துவதால் அடையக்கூடிய பயன்களையும், ஆசீர்வாதங்களையும் உலகெங்கும் அநேக திருச்சபைகளில் பார்க்க முடிகின்றது.

இதே முறையில் வரலாற்றுக் கிறிஸ்தவம் நமக்கு விசுவாச அறிக்கைகளையும் அளித்துள்ளது. இவற்றில் முக்கியமான 1689 இல் வெளியிடப்பட்ட பாப்திஸ்து விசுவாச அறிக்கையின் முக்கியத்துவத்தைப்பற்றி ஏற்கனவே இவ்விதழ்களில் எழுதியுள்ளோம். நமது பாப்திஸ்து பிதாக்கள் பதினேழாம் நூற்றாண்டில் திருச்சபையின் வளர்ச்சி கருதியும், அது இரத்ததானமளித்துப் பெற்றுக் கொண்டுள்ள சீர்திருத்தத்தை இழந்துவிடாமலும் இருக்க அவ்விசுவாச அறிக்கையை தயாரித்தனர். நூறு வருடங்களுக்கு மேலாக இதுவே அக்காலத்து சீர்திருத்த பாப்திஸ்து சபைகளின் விசுவாச அறிக்கையாக அமைந்து சபை மக்கள் சத்தியத்தில் உறுதியுடன் இருக்க துணை புரிந்துள்ளது. சத்தியத்திற்கு ஆபத்து நேரிட்ட வேளையில், தன்காலத்தில் ஸ்பர்ஜனும் இதனை மறுபடியும் புதுப்பித்து, தனது மக்களுக்குத் தொடர்ந்து போதித்து வேதத்தை விசுவாசிக்கும் சபைகள் இதனைப்பின்பற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். சத்தியத்தின் பேரில் வியாபாரம் நடத்தும் போலிகள் மலிந்து, திருச்சபை மக்கள் வழி தெரியாது, திசைமாறிப் போய்க்கொண்டிருக்கும் இந்நாட்களில் இதன் அவசியத்தை யார் மறுக்க முடியும்.

விசுவாச அறிக்கை, வேதபோதனைகளை முக்கியமான தலைப்புகளின் அடிப்படையில் விளக்கும் அருமையான சாதனமாகும். கடந்த சில வருடங்களாக பத்திரிகை ஆசிரியர் தனது சபையில் இதனைத் தொடர்ச்சியாகப் போதிப்பதனால் சபை பல ஆசீர்வாதங்களைப் பெற்று வருவதை அனுபவபூர்வமாக அறிந்துள்ளார். உலகெங்கும் பல சபைகளில் போதகர்கள் இதனைப் பயன்படுத்தி ஆத்துமாக்கள் முறையான கிறிஸ்தவ இறையியல் போதனையைப் பெற்றுக்கொள்ள வழி செய்கிறார்கள். இத்தகைய இறையியல் போதனையினால் சத்தியத்தில் முறையான அறிவைப் பெற்று வளருவது மட்டுமல்லாமல், சத்தியத்திற்கு விரோதமான போக்குகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் சபை மக்களால் முடிகின்றது.

இனிவரப்போகும் இதழ்களில், நமது பிதாக்கள் நமக்களித்துள்ள, கிறிஸ்தவ இறையியல் அறிவை, முறைப்படுத்தப்பட்ட இறையியல் வடிவில் அளிக்கும் 1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையினை விளக்கமாகப் படிக்கப் போகிறோம். இதன் மூலம் நாம் கர்த்தரைப்பற்றியும், அவரது செயல்களைப்பற்றியுமான மேலான அறிவைப் பெற்றுக் கொள்ளமுடியும். கிறிஸ்தவ இறையியலை, முப்பத்திரெண்டு அதிகாரங்களில் முறைப்படுத்தி தெளிவாக வழங்கும் இவ்விசுவாச அறிக்கையின் ஒவ்வொரு அதிகாரத்தையும் முறையாக விளக்கி இறையியல் போதனை வழங்குவதே எமது நோக்கம். இது சபைப் போதகர்களுக்கு மட்டுமல்லாமல் கிறிஸ்தவர்கள் அனைவருமே வேதத்தில் தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்ள துணை புரியும்.

**இறையியல்**

**பதினேழாம் நூற்றாண்டில் நமது பாப்திஸ்து பிதாக்கள் திருச்சபையின் வளர்ச்சி கருதியும், அது இரத்ததானமளித்துப் பெற்றுக் கொண்டுள்ள சீர்திருத்தத்தை இழந்து விடாமலும் இருக்க அவ்விசுவாச அறிக்கையை தயாரித்தனர்.**

**கர்த்தரை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீக வாழ்க்கையைப் பொறுத்தவரை மனிதனின் சிந்தனையில் இருந்து வெளிப்படும் எதுவுமே கர்த்தருடைய வழிபாடாக அமையாது.**

– ஜோன் நொக்ஸ் –

## பரிசுத்த வேதாகமம்

அடுத்த இதழில் மலரப் போகும் இறையியல் பாடம் 1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையின் முதலாவது அதிகாரமான பரிசுத்த வேதாகமத்தின் விளக்கவுரையாக அமையும்.



# வில்லியம் கேரி

**வில்லியம் கேரி**

**கர்த்தரிட மிருந்து பெருங் காரியங் களை எதிர் பாருங்கள்; கர்த்தருக் காகப் பெருஞ் சாதனை களைச் செய்யுங் கள்**

**கேரியும் பிராமணர்களும்**

கேரியின் பிரசங்கத்தை வியப்போடும், பயத்தோடும் பலரும் கேட்டபோதும் அதை ஏற்றுக் கொள்ளவும், அவரைப் பின்பற்றவும் அவர்கள் தயங்கினர். பிராமணர்கள் அதை முதலில் ஏற்றுக் கொள்வார்களானால் நாமும் பின்பற்றுவோம் என்று கூறி விலகி நின்றனர். இந்திய வேத சாஸ்திரங்களில் கேரிக்கு இருந்த அறிவைப்பார்த்து பிராமணர்கள் வியப்புற்ற போதும், ஆரம்பத்தில் அவரை எதிர்க்கவே செய்தனர். பின்பு அதிக கவனத்தோடு அவரை அனுகினர். கேரியை தமது கிராமத்திற்கு வருமாறு அழைத்து, ஆலயங்களின் முகப்பில் அமர்ந்து கதிரவன் மறையும்வரை அவரோடு சம்பாஷனை செய்தனர். கேரியின் மதமும், தங்களுடைய மதமும் ஒன்றே என்றும், தங்கள் தங்கள் இனத்தின் வழிமுறைகளின்படியே அனைவரும் இறைவனை அடைய வேண்டும் என்று அடிக்கடி கேரியிடம் அவர்கள் வற்புறுத்தினர். கேரி அவர்களிடம், ரூபாயும், நாணயமும் எப்படி சமமாக இருக்க முடியும்? அவை இரண்டில் நீங்கள் எதை விரும்புவீர்கள்? என்று கேட்டு தனது கருத்தை வலியுறுத்துவார். சிலவேளைகளில், தாம் வணங்கும் கடவுள்களாலும், சாஸ்திரங்களாலும் இரட்சிப்பை அளிக்க முடியாது என்று அப்பிராமணர்கள் ஒத்துக் கொள்வார்கள். வேறுசில சமயங்களில், தம்மைவிடத் தகுதியில் குறைந்தவர்களிடம் படிப்பது பாவம் என்றும், கிறிஸ்தவ வேதத்தை வாசிக்கக் கேட்பது தங்களுடைய சாதியில் இருந்து தங்களைப் பிரித்துவிடும் என்றும் வாதம் செய்தனர். கேரியின் போதனை சரியானது என்பதற்கு எதாவது ஆதாரத்தையும், அடையாளத்தையும் காட்ட முடியுமா என்று அவரை அப்பிராமணர்கள் நிர்ப்பந்தித்தனர். கேரியின் போதனையைக் கேட்கும் ஏனைய பிராமணர்களையும் அவர்கள் தடை செய்தனர். தங்களுடயை சாபம் பொல்லாதது என்றும், அவரை சபித்துவிடுவோம் என்றும் பயமுறுத்தினர். எப்போதாவது குறும்பு செய்யும் வாலிபர்களைக் கூட்டிச் சேர்த்து அவரது பிரசங்கத்தையும், ஜெபத்தையும் கேலி செய்யுமாறு தூண்டினர்.

கேரி தனதுபிரசங்கத்தில் வசைத்திறத்தைக் கையாண்டார். "உங்கள் கடவுளர்கள் உங்களை இரட்சிப்பார்கள் என்று நம்புகிறீர்களா? கிளியினுடையதும், மனிதனுடையதும் பரிசுத்தம் எப்படி ஒன்றாக இருக்க முடியும்?" என்று கேரி பரிகாசம் செய்வார். ஏதாவது ஒரு சிலை கண்ணில்படும்போது அதைப்பார்த்து, "இது என்ன?" என்று அவர்களைப்பார்த்துக் கேட்பார். "எங்கள் தெய்வம்", என்று அவர்கள் கூறும்போது கேரி, "இது மனிதனை உருவாக்கியதா? அல்லது மனிதன் இதை உருவாக்கினானா?" என்று அவர்களைப்பார்த்துக் கேட்பார். "கங்கை எப்படி உங்களைப் பரிசுத்தமாக்க முடியும்? கல்கத்தாவின் சிறைச்சாலை யைச் சுற்றி ஓடும் கங்கையால் அச்சிறையிலுள்ள குற்றவாளிகளைப் பரிசுத்த மாக்கவோ, விடுதலை செய்யவோ முடியாவிட்டால் அது உங்களை எப்படிப் பரிசுத்தமாக்க முடியும்?" என்று கேலியாக வினாவுவார். "நீங்கள் பூணூலைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், ஆனால் கடவுளோ உங்களுடைய இருதயத்தைப் பார்க்கிறார்" என்று கேரி கூறுவார். ஒரு இந்து சாது தான் தண்ணீரைப் பாலாக்கியதாக பெருமை அடித்துக் கொண்டபோது கேரி அச்சாதுவை தனது வீட்டிற்கு உணவருந்த வருமாறு அழைப்புக் கொடுத்தார். அச்சாதுவைப் பார்த்து கேரி, "நானளிக்கும் உணவு தீண்டத்தகாததாக இருந்தாலும் நீர் பயப்படத் தேவையில்லை. தண்ணீரைப் பாலாக்கும் வல்லமையுள்ள உமக்கு தீண்டத்தகாத

உணவை நல்லுணவாக மாற்றுவதா ஆகாத காரியம்?" என்று கேட்டார். கேரியிடம் சிலர் ஏன் பிராமணர்களை இவ்வாறு கேலி செய்கிறீர்கள்? என்று கேட்டபோது அதற்கு அவர், "நான் வீடுபற்றி எரியும்போது உறங்கிக் கொண்டிருக்கிற மனிதர்களைப் பார்க்கிறேன். அவர்களை உறக்கத்தில் இருந்து எழுப்ப நான் அவர்களை அடித்து எழுப்ப வேண்டியிருக்கிறது" என்று பதிலளித்தார்.

இருந்தபோதும் கேரி, இவ்வாறான அடித்தெழுப்பும் முறைகளைவிட கிறிஸ்து வின் பாடுகளை எடுத்துரைப்பதிலேயே மேலான ஆர்வத்தைக் காட்டினார். பல தடவைகள் கேரியின் பிரசங்கத்தைக்கேட்டு பிராமணர்கள் கண்ணீர் விட்டதை வார்ட் பார்த்திருக்கிறார். கேரியும் கண்ணீர் விட்டுள்ளார். பிராமணர்களைப் பார்த்து கேரி, "உங்களுடைய பாவங்களைத்தீர்க்கக்கூடிய ஒரு கங்கை இருக்கிறது. ஆனால், அது இங்கே ஓடும் கங்கையல்ல" என்று கேரி கூறுவார். கிறிஸ்து அளிக்கும் இலவசமான நித்திய ஜீவனுக்கு பதிலாக, இந்து சமயம் போதிக்கும் கடின உழைப்பை நாடிச் செல்லும் மனிதர்களைப்பார்த்து கேரி பரிதாபப்பட்டார். தனது நண்பர்கள் இவ்வூழியத்தில் பங்கேற்கும் வரையும் தனிமனிதனாக இவ்வூழியத்தில் ஈடுபட்டிருந்த கேரி, நகைச்சுவையாக வும், அன்போடும் பிரசங்கித்து அநேகர் மத்தியில் சத்தியத்தை எடுத்துரைத்தார். ஆனால் எவருமே அதைப் புரிந்து கொள்வதாயில்லை. ஒரு பெண் கேரியைப் பார்த்து, இரட்சிப்பை அடைவதற்கு நான் என்ன உணவருந்த வேண்டும் என்று கேட்டாள். எம்மை உங்கள் மரத்தச்சர்களாகவும், சப்பாத்துத் தைப்பவர்களாக வும் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் உங்களுடைய மதம் எமக்குத் தேவை யில்லை என்று பலரும் கேரியிடமும், அவரது சக ஊழியர்களிடமும் கூறினர். செராமபூரில் ஊழியம் செய்வது கல்லில் நாருரிப்பது போன்றது என்ற முடிவுக்கே கேரியின் நண்பர்கள் வந்தனர். பெங்காளிகள் கர்த்தரிடம் வரும் நாட்கள் இன்னும் தோன்றவில்லை என்றே அவர்கள் எண்ணினர். அதே வேளை கேரியின் சக ஊழியர்களான பவுண்டனும், கிராண்ட்டும் உயிரிழக்க வும் நேரிட்டது.

பெங்காளிகளும் அவர்களைப்பார்த்து, "உங்களைக் கடவுள் ஊழியம் செய்யும் படி அனுப்பி இருந்தால் ஏன் இரண்டு பேர் உயிர்விட வேண்டிவந்தது?" என்று கேட்டார்கள். வீதிகளில் நடந்து போகும்போதெல்லாம், ஒரு இந்துவாவது கிறிஸ்தவனாக வரமாட்டானா? என்ற துக்கம் கேரியையும், நண்பர்களையும் வாட்டியது. எவரிடமும் முழுமையான மனமாற்றத்திற்கும், மறுபிறப்பிற்கும் குறைவான எதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. இத்தகைய மனமாற்றத்தை பெங்காளிகளிடம் எதிர்பார்த்து அது நடக்காததால் அவர்கள் துக்கத்தால் வாடினார்கள்.

**கேரியின் பிள்ளைகள்**

மிஷனரியான வார்ட், கேரியின் இரு பிள்ளைகளின் வாழ்க்கையிலும் அதிக அக்கறை காட்டினார். அவர்கள் இருவரும் வார்ட்டுடன் அச்சகத்தில் வேலை செய்து ஹிந்துஸ்தானியிலும், பெங்காளியிலும் பரிச்சயம் பெற்று இந்தியர்களைப் போல அம்மொழிகளில் சரளமாகப் பேசினார்கள். இருப்பினும் அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் முதிர்ச்சிடையாமல் இருந்தனர். பீலிக்ஸிற்கு வயது பதினைந் தாகவும், வில்லியத்திற்கு பண்ணிரண்டாகவும் இருந்தது. மனநிலை பாதிக்கப் பட்டிருந்த தாயின் வழிநடத்தல் கிடைக்காமையால் இருவருமே முரட்டுத்தன முள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் இருவருமே எல்லாவித கிறிஸ்தவ வழிமுறைகளையும் இழந்து உலகின் போக்கில் போய்விடக்கூடிய ஆபத்திருப் பதை உணர்ந்த வார்ட், அவர்களில் தனது கவனத்தைச் செலுத்தத் தொடங்கி னார். இது கேரிக்கு பெரும் மனநிம்மதியைத் தந்தது.

வார்ட் கேரியின் பிள்ளைகள் இருவரையும் தனியாகவோ அல்லது கூட் டாகவோ அழைத்துச் சென்று ஆவிக்குரிய காரியங்களைப் பற்றி அவர்களோடு பேசுவார். வார்ட்டின் பிறந்த தினமாகிய அக்டோபர் 20 பீலிக்ஸின் வாழ்க்கையில் ஒரு முக்கிய தினமாக அமைந்தது. பீலிக்ஸின் பிறந்த தினமும் அதுவே. இருவரும் அன்றைய தினத்தை ஒன்றாகக் கழித்தனர். அதற்கு அடுத்த நாள் பீலிக்ஸ் வெளியில் போய் முதல் முறையாக பிரசங்கம் செய்தான். அப்பிரசங்கத்தைக் கேட்ட வார்ட், இந்தியாவிற்குத் தகுதியான இதைப்போன்ற ஒரு பிரசங்கத்தைத் தான் கேட்டதில்லை என்று குறிப்பிட்டார். அன்று முதல்

**வில்லியம் கேரி**

***"பலரும் எம்மைத் தூற்றுகின்றனர் ஆனால், நாங்கள் இந்நாட்டில் கர்த்தருக்கான ஆலயத்தை எழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். அவரையே நாம் நம்பியிருக்கிறோம்."***

*- கேரி -*

**வில்லியம் கேரி**

பருத்தி மரத்தடியிலும், சிறு கூட்டங்களிலும், செராம்பூரின் பகோடாவிலும் சிறுவனான பீலிக்ஸ் பிரசங்கம் செய்யத் தொடங்கினான். வில்லியத்தையும் அதே வழியில் போகும்படி வார்ட் தூண்டினார்.

தனது பிள்ளைகளில் ஏற்பட்ட பெரு மாற்றம் கேரிக்கு அதிக ஆனந்தத்தை அளித்ததோடு அவரது வாழ்க்கையும் முற்றாக மாற்றியது. அவரது மனத் தளர்ச்சியை எல்லாம் அகற்றி அதிக உற்சாகத்தை ஏற்படுத்தியது. கேரிக்கு ஊழியத்தில் இருந்த அதே வாஞ்சையை அவரது பிள்ளைகளிலும் பார்த்த கேரியின் சக ஊழியர்களும், அவர்களுடைய குடும்பங்களும் ஒரு புதிய உற்சாகத்தைப் பெற்றனர். கேரியின் பிள்ளைகளைப் போலவே தங்களுடைய பிள்ளைகளும் அவ்வாறு மாறுவார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டது. அதே வகையில் அவர்களும் பிற்காலத்தில் மாறி கர்த்தரின் வழியில் சென்றனர். அதன்பின் முழு மிஷனும் ஒரே எண்ணத்தையும், இலட்சியத்தையும் கொண்டு முன்னோக்கிப் போகத் தொடங்கியது. கேரி, இதற்கு மேலும் மனத்தளர்ச்சியடைய எந்தக்காரணமும் இருக்கவில்லை. கேரியின் வாழ்வில் இதுவரை இருந்த கருமுகில்கள் எல்லாம் அகன்றன. அவரைப் பீடித்திருந்த வரட்சி நீங்கியது. வேறெவரையும்விட நான் அதிக ஆனந்தத்தை அடையக் காரணமிருக்கிறது என்று கேரி இதைப்பற்றி எழுதும்போது குறிப்பிட்டார். அவரது பிள்ளைகளின் வாழ்க்கையில் இபெருமாற்றத்தைக் கொண்டுவந்ததன் மூலம் கடவுள், கேரியின் வாழ்வில் ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்ததோடு, அவரது எதிர்கால வெற்றியின் நிச்சயத்தையும் உறுதிப்படுத்தினார். *(வளரும்)*




# புதிய வெளியீடுகள்

### *திருச்சபை சீர்திருத்தம்*

**இதுவரை திருமறைத்தீபத்தில் கர்த்தர் கட்டியெழுப்பும் திருச்சபை என்ற தலைப்பில் தொடராக வெளிவந்த கட்டுரைகளை விரிவாக்கித் தொகுத்து திருச்சபை சீர்திருத்தம் என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளோம். வாசகர்களில் பலரும் இவை நூலாக வெளிவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இதனை நல்ல முறையில் வெளியிட்டுள்ளோம். 72 பக்கங்கள் கொண்ட இந்நூல் திருச்சபை போதகர்கள், சபை மக்கள், ஊழியக்காரர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.**

### *சுவிஷேசக் கோட்பாடும் புதிய சுவிஷேசக் கோட்பாடும்*

**இதுவும் திருமறைத்தீபத்தில் ஏற்கனவே கட்டுரையாக வெளிவந்தது. இபோது நூலுருவில் வெளிவந்துள்ளது. இன்றைய கிறிஸ்தவ உலகில் சுவிஷேசக் கோட்பாட்டாளர் போல் தோற்றமளித்து வரும் போலிகளை இனங்காட்டி, மெய்யான சுவிஷேசக் கோட்பாட்டியக்கத்தின் அடிப்படை அம்சங்களை தெளிவாக எடுத்துரைக்கும் நூல்.**




### *தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு*

**திருமறைத்தீபத்தில் வெளிவந்த ஜேம்ஸ் அடம்ஸின் "தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு" எனும் கட்டுரை இப்போது நூல் வடிவம் எடுத்துள்ளது. கிறிஸ்து இலவசமாக வழங்கும் இரட்சிப்பை மனித முயற்சிகளின் மூலம் அடைய முயல்வோரின் செயல்களின் பின்னணியில் உள்ள தவறான இறையியல் போதனைகளையும், நடைமுறைகளையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் அடம்ஸ்.**

**இந்தியா, ஸ்ரீலங்கா தவிர்ந்த நாடுகளில் உள்ள வாசகர்கள் நியூசிலாந்து 15 டாலர்கள் (தபால் செலவு உள்ளடங்கியது) அனுப்பி இம்மூன்று நூல்களையும் பெற்றுக் கொள்ளலாம். வங்கிக் காசோலை அனுப்ப வேண்டிய முகவரி :** Sovereign Grace Books, P O Box 62 159, Sylvia Park, New Zeland. email: bala@ihug.co.nz

*இந்நூல்களை வாங்கி சீர்திருத்தம் வளரத் துணை செய்யுங்கள்*

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

*கேள்வி 36: பரிசுத்தமாக்குதல்* (Sanctification) *என்றால் என்ன?*

*பதில்: நாம் முழுமையாக கடவுளின் சாயலின்படியாக புதுப்பிக்கப்பட்டு, தொடர்ந்து பாவத்தில் மரித்து, நீதிமான்களாக வாழும்படிச்செய்யும் கர்த்தரின் இலவசமான கிருபையின் செயலே பரிசுத்தமாக்குதல் என்பது.*

*(2 தெசலோனிக்கேயர் 2:13; எபேசியர் 4:23-24; 1 யோவான் 5:4)*

**விளக்கக்குறிப்பு:** இரட்சிப்பைப் படிமுறையாகப் பார்க்கும்போது நீதிமானாக்குதல், மகவேட்பு ஆகியவற்றைத் தொடர்ந்து அடுத்தபடியில் நிற்பது பரிசுத்தமாக்குதலாகும். இவ்வாறு கூறுவதனால் இவையனைத்தும் படிமுறையாக நம் வாழ்வில் நிகழ்வதாக நாம் கூறுவதாக எண்ணிவிடக்கூடாது. பரிசுத்தமாக்குதல் மனிதனால் ஏற்படுவதல்ல. அதைக் கடவுளே மனிதனில் நிகழ்த்துகிறார். ஆனால், கடவுள் மனிதனில் நிகழ்தும் பரிசுத்தமாக்குதலில் மனிதன் பொறுப்புடையவனாகவும், அதில் முழுப்பங்கேற்பவனாகவும் இருக்கிறான். வேதம், "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்." என்று போதிப்பதோடு அதற்கான காரணத்தையும் பின்வருமாறு விளக்குகிறது: "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." இங்கே பரிசுத்தமாக்குதல் எவ்வாறு கடவுளுடைய செயலாகவும், அதேவேளை நமது செயலாகவும் அமைய முடியும்? என்ற கேள்விக்கு நாம் பதிலளித்தே ஆக வேண்டும்.

**(1) ஒரு மனிதனின் இருதயத்தில் பரிசுத்த ஆவியின் செயலால் ஒரு பெரும் அடிப்படை மாறுதல் ஏற்படும் வேளையிலேயே பரிசுத்தமாக்குதல் ஆரம்பமாகின்றது.** இம்மாறுதல் தேவனால் ஏற்படுத்தப்படுவதாகும். இதனை மறுபிறப்பு என்று அழைப்பர். பவுல் அப்போஸ்தலன் கலாத்தியர் 3:10 ல் நம்மைப் பார்த்து, "பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனிதனை தரித்துக் கொண்டிருக்கிறீர்களே." என்று கூறுவதைப் பார்க்கிறோம். ஒரு மனிதன் மறுபிறப்பினால் முழுமையாக புதுப்பிக்கப்பட்டபோதும், அவன் முழுமையாக, பூரணமானவனாக்கப்படவில்லை என்பதையும் நாம் மனதிலிருத்திக் கொள்ள வேண்டும். ஒரு மனிதன் ஆவியினால் மறுபிறப்படையும்போது, அவன் மரணத்திலிருந்து விடுபட்டு ஜீவனை அடைகிறான். அவன் பாவத்தின் ஆளுகையில் இருந்து அன்றோடு விடுதலை பெறுகிறான். ஆனால், அதேவேளை, பாவத்தின் வல்லமை முற்றாக அவனைவிட்டு நீங்கிவிடுவதில்லை. மூலபாவமாகிய நோயின் பாதிப்பு அவனைவிட்டு முழுமையாக நீங்கிவிடவில்லை. இதனை remaining sin என்றும் indwelling sin என்றும் அழைப்பார்கள். ஆகவே, நமது புதிய மனிதன் நம்மில் தொடர்ந்திருக்கும் பாவத்தோடு நிகழும் போராட்டத்தில் தொடர்ந்து வெற்றி அடைந்து பரிசுத்த ஆவியின் செயலினால் இவ்விதமாக பரிசுத்தமாக்கப்படுகிறான்.

**(2) அத்தோடு, பரிசுத்தமாக்குதல் ஒரு மனிதனில் தொடர்ச்சியாக ஆனால், படிமுறையாக நிகழும் செயலாகும்.** அது நீதிமானாக்குதலைப்போலோ அல்லது மகவேட்பைப்போலோ உடனடியாக நிகழும் ஒரு செயலல்ல. இது தொடர்ச்சியாக நம்மில் நடக்கும் ஒரு செயலாகும். இவ்வுலகில் நாம் வாழ்ந்து முடிவதற்குள் பரிசுத்தமாக்குதல் நம்மில் பூரணமாக முற்றுப் பெறுவதில்லை. பரிசுத்தமாக்குதல் ஆவியானவரால் கிறிஸ்தவனில் நிகழ்வதால் இதன்மூலம் அவனில் ஏற்படும் ஒரு போராட்ட அனுபவத்தையும் நாம் கவனிக்க வேண்டும். இப்பரிசுத்தமாக்குதலால் ஒரு கிறிஸ்தவன் தன்னில் தொடர்ச்சியாக பாவத்தோடு போராட்டத்தை நிகழ்த்திக் கொண்டிருப்பான். யோவான் தனது நிருபத்தில், கடவுள் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் (கிறிஸ்தவன்) சுத்திகரித்துக் கொள்கிறான் (1 யோவான் 3:3) என்று கூறுவதைப் பார்க்கிறோம். மறுபிறப்படைந்த ஒரு மனிதன் பாவத்தில் சமாதானம் அடைய மாட்டான் (1 யோவான் 3:6-9). ஏனெனில் யோவான் கூறுவதுபோல், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்ய மாட்டான்." ஒரு மனிதன் மறுபிறப்படைந்து, கிறிஸ்துவின் சாயலின்படி வாழ்கிறபோது பாவம் அவன் மேல் அதிகாரம் செலுத்த வழியில்லை. இருப்பினும் ஒரு விசுவாசி பாவம் செய்வான். ஆனால், அதைச்செய்தபின் அதில் ஒன்றும் தவறில்லை என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ள மாட்டான். ஒருபோதும் தான் பாவம் செய்யக்கூடாது என்றே அவன் நினைப்பான். தனது நிலையைக்குறித்து அவனுக்குத் திருப்தி இருக்காது. பாவத்தை அவன் வெறுப்பதால் தன்னோடு எப்போதுமே ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருப்பான். இதன் அடிப்படையிலேயே நாம் பவுல் ரோமர் 7:7-25 இல் கூறுவதைப் புரிந்து கொள்ள முடியும். பவுல் தான் பாவம் செய்வதை ஒத்துக் கொள்கிறார். தான் செய்ய விரும்பாததைச் செய்து விடுவதாகவும், செய்ய விரும்புவதை செய்யாம

லிருக்கும் தனது நிலையை பவுல் இப்பகுதியில் விளக்கு கிறார். ஆனால், அந்நிலையில் தொடர்ந்திருப்பதை பவுல் விரும்பவில்லை. தனது நிலையை "நிர்ப்பந்தமான மனுஷன் நான்!" என்று பவுல் வர்ணிப்பதைக் காணலாம். தனது மனத்தில் பாவத்தோடு இத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோதும், கிறிஸ்துவிற்குள்ளாக தனக்கு வெற்றி நிச்சயம் என்பதையும் பவுல் இங்கே குறிப்பிடு வதைப் பார்க்கலாம். இது மெதுவாக நிகழ்ந்தபோதும், உறுதியாக, நிச்சயமாக நடக்கும் ஒரு செயலாகும்.

(3). இப்பரிசுத்தமாக்குதலில் மனிதன் கடவுளோடு இணைந்து செயல்படுகின்றான். இக்காரியத்தில் கடவு ளும், மனிதனும் சுறுசுறுப்பாக ஈடுபடுகிறார்கள். இத னால் மனிதன் கடவுளுக்கு இணையாக, சமத்துவமாக செயல்படுகிறான் என்று பொருளல்ல. இச்செயலில் மனி தனின் பரிசுத்தமாக்குதலுக்கான அனைத்து மதிப்பையும் கடவுளே அடைகிறார். அதேவேளை, மனிதன் இச்செய லைப் பொறுத்தவரை கடவுளுக்குமுன் எப்போதுமே தகுதியற்ற சேவகனாகவே காணப்படுகிறான். கடவுளும் மனிதனும் இணைந்து ஈடுபடாத பரிசுத்தமாக்குதல் என்று ஒன்று இல்லை. இதைப் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் விளக்கும்போது, "அதிக பயத்தோ டும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசைப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையை யும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" என்று கூறுவதைப் பார்க்கிறோம். நாம் நம்மைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். அதேவேளை, தேவனே இதைச் செய்ய நமக்குத் துணையாயிருக்கிறார் என்பதையும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

ஆகவே, ஒருவரில் நிகழும் பரிசுத்தமாக்குதலுக்கு சாட்சி யாக ஒரே ஒரு காரணியே இருப்பதைப் பார்க்கிறோம். பாவத்தில் தொடர்ந்து மரித்து, நீதிமானாக வாழ்வதை இலட்சியமாகக் கொண்டவனே பரிசுத்தமாகுதலில் ஈடுபட் டிருப்பவன். இவ்வாறான பரிசுத்தமாக்குதலில் ஈடுபட் டிருப்பவன் யோவான் கூறுவதுபோல் கர்த்தரில் அன்பு கூர்ந்து அவரது கட்டளைகளை நிறைவேற்றுகிறவனாக (1 யோவான் 5:3) இருப்பான். அவனால் கர்த்தரின் கட் டளைகளை பூரணமாக நிறைவேற்ற முடியாவிட்டாலும் (1 யோவான் 1:8, 10), அவன் அதை நிறைவேற்றுவதற்கான சகல முயற்சிகளிலும் ஈடுபடுவான். அவன் நியாயப் பிரமாணத்தை நேசிக்கிறவன். அது அவனைத் துக்கப் படுத்தாது. பூரணமாக இல்லாவிட்டாலும், அவன் நியாயப் பிரமாணத்தைத் தொடர்ந்து தன்வாழ்வில் கடைப்பிடிப் பான். இதனாலேயே வேதம், கிரியைகளில்லாத விசுவாசம் செத்த விசுவாசம் (யாக்கோபு 3:20) என்று கூறுகிறது.

முடிவாக, பரிசுத்தமாக்குதலில் ஈடுபட்டிருப்பவர்களில் நாம் எப்போதுமே தாழ்மையைப் பார்க்கலாம். இதை நாம் வேதத்தில் மோசே, தாவீது, பேதுரு, பவுல் ஆகியோரின் வாழ்க்கையில் தவறாது பார்க்கலாம். இவர்கள் தங்கள் வாழ்க்கையில் பாவத்தோடு தொடர்ந்து போராடியதைப் பார்க்கிறோம். இவர்கள் சிலவேளைகளில் பாவத்தில் வீழ்ந்தபோதும், அதிலிருந்து உடனடியாக விடுபட்டு தொடர்ந்து உற்சாகத்தோடு பாவத்தோடு போராடுவதைப் பார்க்கிறோம். இவர்களுடைய வாழ்க்கையில் இரு காரி யங்களைத் தவறாது பார்க்கலாம். தங்களுடைய வாழ்க் கையில் இவர்கள் மேலும், மேலும் பரிசுத்தத்தை அடைவ தோடு, கர்த்தருக்கு முன்பு தாங்கள் எவ்வளவு தூரம் தாழ்ந்தவர்கள் என்பதையும் அதிகமாக உணர்ந்தவர்களா கக் காணப்படுகிறார்கள். இன்னுமொருவிதத்தில் கூறப் போனால் எவ்வளவு தூரம் இவர்கள் பரிசுத்தத்தில் உயர் கிறார்களோ அவ்வளவு தூரத்திற்கு தாங்கள் பாவிகள் என்பதையும் உணர்கிறார்கள்.

இதுவரை நாம் பார்த்தவற்றை சுருக்கமாகக் கூறுவதா னால், பரிசுத்தமாக்குதல் என்பது, நாம் வாழ்க்கையில் உயர, உயரப் போய் கடவுளின் முன்னால் நாம் பரிசுத்த மானவர்கள் என்ற பெருமையோடு போய் நிற்பதல்ல. மாறாக, பரிசுத்தமாக்குதல் என்பது நாம் வாழ்க்கையில் நம்மைக்குறித்து மேலும் மேலும் தாழ்மையான எண்ணங் களைத் தொடர்ந்து கொண்டிருப்பதோடு, எல்லாவற்றிற்கும் மேலாக பரிசுத்தத்தை அடைய வேண்டும் என்ற பேரார் வத்தையும் கொண்டிருப்பதாகும். இத்தகைய மெய்யான தாழ்மை நம்மில் காணப்படும்போதே நாம் பரிசுத்தத்தை அடைகிறோம்.

## *சீர்திருத்தத் தந்தை: மார்டின் லூதர்*

**ப**தினாறாம் நூற்றாண்டில் கர்த்தர் ஏற்படுத்திய திருச்சபை சீர்திருத்தத்தில் முதன்மையான இடத்தை வகித்தவர், இவ்விதழின் முகப்பட்டையில் காட்டியளிக்கும் மார்டின் லூதர். ரோமன் கத்தோலிக்க மதகுருவாக இருந்து, பாவத்தின் கொடூரத்தைத் தனது வாழ்க்கையில் உணர்ந்து, அதில் இருந்து விடுபட எதை எதையோ செய்து எந்தப்பயனுமி ல்லாமல், இறுதியில் பாப்பையரின் தயவை நாடி ஓடி, அங்கே பாவத்தின் பேருருவமாகவும், அதற்கு ஊழியம் செய்யும் சேவகனாகவும் இருக்கும் பாப்பையரின் பரிதாப நிலையைக் கண்டு கலங்கி, இறுதியில் தனது தனியறையில் வேதத்தின் பக்கங்களைக் கண்ணீரால் கழுவித் தியானித்து, பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் விசுவாசம் கர்த்தர் தரும் ஈவு என்ற சத்தியத்தை பரிசுத்த ஆவியின் வல்லமையால் உணர்ந்து, கர்த்தரிடத்தில் மன்றாடித் தன்பாவத்திற்கு மன்னிப்புக் கேட்டு, ஆவியின் வல்லமையான கிரியையினால் கர்த்தர் இலவசமாகத் தந்த இரட்சிப்பைப் பெற்று வாழ்வடைந்தவர் மார்டின் லூதர்.

# எண்ணங்கள் !

துர்ப்போதனைகளின் மாத இதழ்கள் பெருகி வருகின்ற இக்காலத்தில் சரியான போதனைகளைக் கொடுக்கின்ற மிக நேர்த்தியான பத்திரிகையைப் படிக்க முடிவதில் அதிக மகிழ்ச்சி. கருத்துக்கள் மட்டுமல்ல, தமிழ்நடை, அச்சு அனைத்துமே நன்று. தெய்வநாயகத்தின் போதனைகளைக் கண்டித்து தாங்கள் எழுதியிருந்ததையும் வாசித்தேன். விரல்களை வெட்டி மடாலயங்களுக்கு பார்சல் செய்யும்படி தனது பத்திரிகையொன்றில் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதை வாசித்து அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை. இன்னும் ஆணித்தரமாக அவரது துர்ப்போதனைகளைக் கண்டித்து எழுதினால் நலமாயிருக்கும்.

*எஸ். சேகர், தமிழ்நாடு*

பரிசுத்த வேதாகமத்தை வைத்துக் கொண்டு, கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கின்ற கள்ளப் போதகர்களுக்கும் திருமறைத்தீபம் ஒரு சரியான சவுக்கடி யாகவும், அவர்களுடைய வாயை அடைக்கும் சாதனமாகவும் உள்ளது.

*ஆ. வேணுகோபால், தமிழ்நாடு*

பத்திரிகையின் ஒரு சில இதழ்களை மட்டுமே வாசிக்கும் வாய்ப்பு கிட்டியது. ஆழ்ந்து சிந்திக்கக் கூடிய கிறிஸ்தவக் கோட்பாடுகளைத் தெளிவுபட எழுதுகிறீர்கள். பால் யாங்கி சோவின் பரிமாணங்களை ஒட்டு மொத்தமாக அறிந்து அதில் தெளிவு பெற எண்ணுகிறேன். தெளிவான தூய்மை யான கருத்துக்களை எழுதும் தங்களுக்கு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

*எம். எபிராஜன், தமிழ்நாடு*

பத்திரிகையின் ஆக்கங்களும், உள்ளடக்கங்களும் நம்பும்படி யாகவும், ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பயன்படும்படியாகவும் உள்ளன.

*ஜே. ஜோசப் ராஜன், தமிழ்நாடு*

ஆக்கபூர்வமான, இன்றைய சபைகளின் சூழ்நிலைகளில் தேவையான ஒரு மலராக பத்திரிகை வெளிவருவதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். விசுவாசியாக இருப்பதை விட ஊழியனாக இருப்பதுதான் மேலானது என்று நினைப் பது இன்றைய கிறிஸ்தவ உலகம். குழப்பங்கள் நீங்க இப்படி ஒரு பத்திரிகை தேவை என உணர்கின்றேன். சந்தேகங்களைப் போக்கி எம் போன்றோர் சொல்லத் துடிப்பவைகளை தீபம் அதிகாரத் துடன் சொல்வதால் பாராட்டுக்கள்.

*பாஸ்டர். பி. பொன்னையா, கனடா*

உங்களுடைய பத்திரிகை எனக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்தியாவில் இது மட்டுமே தமிழில் சீர்திருத்தப் போதனைகளை அளிக்கும் பத்திரிகையாக உள்ளது.


*சார்ள்ஸ் கிருபாகரன், தமிழ்நாடு*

சத்தியம் புறட்டப்பட்டு, பரவசமும், புதிய கொள்கைகளும், புதிய கோட்பாடுகளும் மலிந்து, வியாபார நோக்கில் விவிலி யம் பேசப்படுகின்ற இக்காலத்தில் சத்தியத்தைப் போதிக்கும் பத்திரிகையான தீபத்தைக் கண்டு, வாசித்து மகிழ்கிறேன்.

*டீ. ஸ்டீபன் நடராஜன், தமிழ்நாடு*

தமிழ் மட்டுமே தெரிந்து, ஸ்பர்ஜன், லூதர், ஓவன் போன் றொரின் கருத்துக்களில் ஆர்வமுடையவர்களுக்கு பத்தி ரிகை ஆவிக்குரிய தீபமாக இருக்கின்றது. கிறிஸ்தவக் கோட்பாடுகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. பத்திரி கையைத் தொடர்ந்து அனுப்பி வையுங்கள்.

*பாஸ்டர் அருள்பிரகாசம், தமிழ்நாடு*



## உள்ளே . !


1. 1 கொரிந்தியர் 12-14
3. வியாக்கியானப் பிரசங்கம்
4. செய்தித் துணுக்குகள்
5. கிருபையின் கோட்பாடுகள்
6. கிறிஸ்தவ இறையியல்
7. வில்லியம் கேரி
8. கிறிஸ்தவக் கோட்பாடுகள்
9. எண்ணங்கள் !